# செந்தமிழ்

தொகுதி 79 செப்டம்பர் '85 பகுதி 3

— இந்த இதழில்

— பதினான்கு நூல்களின் மதிப்புரைகள்

— மலையாளத்தில் தமிழ் இலக்கியங்கள்

— கடல் கடந்த கண்ணன்
— ஹரே கிருஷ்ணா இயக்கம்

— கவிதையும் பிறவும்

## மதிப்புரைச் சிறப்பு மலர்

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURA TAMIL SANGAM

ஆசிரியர் : என்.எஸ். முத்துமலைச்சாமி
பி.ஏ. பி.எல்.,

# செந்தமிழ்

தொகுதி 79 செப்டம்பர் 1985 பகுதி-3

10123

உள்ளுரை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | நூல் மதிப்புரை | 87 |
| 2. | கந்தர் கலித்துறை | 97 |
| 3. | நீடித்த வாழ்வு | 99 |
| 4. | சைவமும் வள்ளலாரும்<br>டாக்டர் பி.ஆர். நரசிம்மன் | 101 |
| 5. | பழமையும் புதுமையும்<br>புலவர். பொன். முகிலன் | 105 |
| 6. | மலையாளத்தில் தமிழ் இலக்கியங்கள் | 107 |
| 7. | காரைக்குடியின் புதிய துணை வேந்தர் | 111 |
| 8. | கரிய வாயுக்கலன்<br>ஒ தி. கணேஷ் ஷியாம்பாபு | 114 |
| 9. | பாரதிதாசன் — ஒரு மதிப்பீடு<br>— பழனி. அரங்கசாமி | 120 |
| 10. | நூல் மதிப்புரை | 132 |
| 11. | கடல் கடந்த கண்ணன்<br>பி.ஆர். ஸ்வாமி | 134 |


பொறுப்பாசிரியர் : பழனி. அரங்கசாமி

## ஆசிரியர் பக்கம்

அன்புடையீர்!

வணக்கம்,

பல்வேறு நூல்களைப் பற்றிய மதிப்புரைகளைத் தாங்கி வெளி வருகின்ற இந்த இதழ் விரும்பி வரவேற்கப்படும் என்று நம்புகிறோம். ஈழத்தமிழரின் இன்னல் தேசீய அளவில் விவாதிக்கப் படுகின்ற இக்கால கட்டத்தில் இலங்கையின் தேசியம் பற்றியும் நூல் மதிப்புரை ஒன்று சுருங்கிய அளவில் பேசுகிறது. எமது வேண்டுகோளுக்கு இணங்கி நூல் வெளியீட்டகங்களும் தனிப்பட்டோரும் தத்தமது நூல்களை அனுப்பியமைக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். இந்த இதழில் மதிப்புரைக்கப் பெறாத ஏனைய நூல்களின் பட்டியல் பிறிதோர் பக்கத்தில் குறிக்கப்பட்டுள்ளது. அடுத்து வரும் இதழ்களில் அவற்றின் மதிப்புரைகளும் இடம் பெறும்.

வள்ளலாரைப் பற்றியும் வானொலியில் இடம் பெற்ற பாரதி தாசனைப் பற்றிய கட்டுரையும் இவ்விதழில் நிறைவு பெறுகின்றன. உலகக் கிருஷ்ணாய இயக்கத்தைத் (ISKCON) தொடங்கிய பிரபுபாத சுவாமிகள் வாழ்க்கை வரலாறு தொடர் கட்டுரையாக வெளி வருகிறது. மதிப்புரைகளோடு கவிதையும், கட்டுரையும் வழக்கம்போல் வெளி வருகின்றன. பிறமொழியின் கண்ணும் தமிழ் இலக்கியச் செல்வாக்கு பற்றி சிந்திப்பதற்கு மலையாள மொழியில் தமிழ் இலக்கியங்கள் எனும் சிறு கட்டுரை தூண்டுகோலாக அமையும்.

— ஆசிரியர்

## நூல் மதிப்புரை

(1) எதிர் நீச்சல் : ஆசிரியர்: கடவூர் மணிமாறன், எம்.ஏ., மணிமேகலை பதிப்பகம், சின்னதாராபுரம், கரூர் (வட்டம்), 639202. 96 பக்கங்கள், விலை ரூ 5 / -.

கலகலவென, பொல பொலவெனப் புதுக்கவிதைகளைப் பொழுது போகாதவர்களும் பெற்றுத் தள்ளிக் கொண்டிருக்கிற இந்த வேளையில், மரபுக்கவிதை ஆறுதல் தருவதாகவே அமைகிறது. கடவூர் மணிமாறனின் கவிதைக்கோல் 'எதிர் நீச்சல்' என்ற தலைப்பின் கீழ் சமுதாயத்தின் பல பகுதிகளையும் பார்க்கும் வாய்ப்பை நமக்குத் தந்துள்ளது. கவிஞர், சமுதாயச் சாக்கடையைக் கூசாமல் கிளறிக் காட்டியுள்ளார். ஆனால் நமக்குத்தான் அதன் தீய நாற்றம் தெரிவதில்லை - அதிலேயே நாம் வாழ்வதால், கவிதைகள் பலவற்றிலும் 'சிறுமை கண்டு பொங்கும்' கவிஞரின் ஆவேசத்தை நம்மால் உணர முடிகிறது. பல கவிதைகளில் பாரதிதாசனின் சாயலை கடவூர் மணி மாறனிடத்தில் நாம் காண்கிறோம். இங்குக் கூறப்படும் கருத்துக்கள் கூடப் பல கவிஞர்கள் தொட்டவைதான். ஆனாலும் நாமென்ன திருந்தியா விட்டோம்? அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகருமாமே! அந்த வகையில் இந்தக் கவிஞரும் அடிக்கிறார். எவ்வளவு நகருவோம் என்பதைப் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்.

சில சான்றுகளைப் பார்ப்போம்:

காதல் திருமணம் பற்றிக் கூறுகையில்,,

மனப் பொருத்தம் இருந்தாலே போதும்; வேண்டும்
மணப் பொருத்தம் அதுவேயாம். இடையில் வந்த
இனப் பொருத்தம் பணப் பொருத்தம் என்ப தெல்லாம்
ஏற்பில்லாப் பொருத்தம் தான்''. (ப. 15).

கவிஞரின் நெஞ்சம் தமிழுக்காக இப்படித் துடிக்கிறது.

''தமிழ் நாட்டுத் தெருக்களிலே தமிழ் மணமா
நுகர்கின்றோம்? வேற்றோர் நாட்டில்

தமிழ் முழக்கம் கேட்பீரா? தன்மானம்
அற்றோரே! தமிழைக் காப்பீர்!" (ப. 34)

வயிறு பற்றி,

"வாயிருந்தும் பேசாத உயிர்கள் உண்டு
வயிறிருந்தும் பசியாத உயிர்கள் உண்டோ?" (ப. 61)

செல்வம் பற்றி,

நிலையில்லாப் பொருளே! உன்றன்
நெஞ்செலாம் இருளே ஆகும்" (ப. 79).

இளைஞர் பற்றி,

"எதிர்கால நாட்டை ஆக்கும்
ஏந்தல்கள் இற்றை நாளில்
புதிராகத் திரிவா ராயின்
புலம்பலே எஞ்சும்" (ப. 76)

என்றெல்லாம் கூறுவன சுவையிற் சிலவே. இன்னும் சொல்லலாம். ஆனால் இது மதிப்புரைப் பக்கம். முழுவதும் சுவைக்க வேண்டுமானால் பேசாமல் 'எதிர் நீச்சல்' புத்தகம் ஒன்றை வாங்கிவிடுங்கள். ரூபாய் ஐந்து மட்டுமே.

S. சுந்தரி எம்.ஏ.,

(2)

நூல் : பாரதி - திரு.வி.க.
நடைசிந்தனை
ஆசிரியர் : டாக்டர் இர. குழந்தைவேலு
தமிழகம் - வித்யாநகர்
கோவை—14
விலை : ரூபாய் எட்டும் பைசா ஐம்பதும்.

நடப்பு நூற்றாண்டில் நாட்டு விடுதலைக்குப் பாடுபட்டவன் மாக்கவிஞன் பாரதி. நாட்டு விடுதலையோடன்றி தொழிலாளர் இயக்கம் பத்திரிகைத்தொழில் ஆகியவற்றிலும் ஈடுபட்டு அருந் தொண்டாற்றியவர் திரு. வி. க. சமகாலத்தில் வாழ்ந்த இந்த இரு வரையும் இணைத்துப் பார்க்க முயலும் இச்சிறுநூல் ஓர் அறிய ஆராய்ச்சியின் விளைவு. 'நடைச் சிந்தனை' என்னாது 'நடையும்

சிந்தனையும்' என்று நூலின் தலைப்பு அமைந்திருந்தால் மிகவும் தெளிவாக இருந்திருக்கும். ஒரு கவிஞனைத் தலைசிறந்த உரைநடையாளரோடு ஒத்துக்காண்பது ஒரு துணிச்சலான செயல். அதில் ஈடுபட்டு வெற்றியும் கண்டுள்ளார் இந்நூலாசிரியர். வாழ்க்கைச் செய்திகள் எனும் கட்டுரை இரண்டு அறிஞர்களையும் சுருக்கமாக அறிமுகப்படுத்துகிறது. எனினும் நூலுக்கு மையமாக விளங்கும் நடைச்சிந்தனை எனும் கட்டுரையே விரிவாகவும், தெளிவாகவும் தேவையான மேற்கோள்கள் நிறைந்தும் காணப்படுகிறது. திரு. வி. க. வின் தமிழ்நடை எளியதும் இனியதுமாகும். கடுஞ்சொல் பேசாத கனிவுமிக்க அவரது உள்ளம் போன்று மென்மையும் தெளிவும் ஒருசேர அமையப்பெற்ற அந்த உயர்ந்த தமிழ்நடை டாக்டர். குழந்தைவேலுவை மிகவும் ஈர்த்துள்ளது. இச்சிறுநூலின் பற்பல இடங்களில் காணப்படும் நடையழகு திரு. வி. க. வினை நினைவுறுத்துகிறது. இருப்பினும், தெளிவு கருதியோ எளிமையினை எண்ணியோ கூறியது கூறலாக வரும் (பக்கம்-67) 'நாட்டமே அவரது நாட்டம்', 'நடையே நடை' 'உண்மை உண்மையாகின்றது' போன்ற சொற்றொடர்களைத் தவிர்த்திருக்கலாம். எளிமையும், இனிமையும, தெளிவும் இருத்தல் என்பதற்காக உரைநடையினை வெற்றுரை (verbiage) யாக அமைக்கக் கூடாது. பக்கம் 30ல் ஒரு சான்று.

> "பாரதிதாசனார் தம் உள்ளத்தில் அது உணர்ச்சியாகப் பொங்கிப் பெருகியது. அந்த உணர்ச்சியின் வெளியீடாகச் சிறந்த தொரு பாடலை அவர் இயற்றினார். அவரது பாட்டில் பதிந்தது பாராட்டு உணர்ச்சியாகும். அதனைக் காட்டும் தமிழ்ப்பாட்டு இது"

பாரதிதாசனாரின் பொங்கிப்பெருகிய பாராட்டுணர்வு கீழ்வரும் பாடலால் தெளிவாகிறது-என்று எழுதினாலே போதுமானது.

பக்கம் 41 - இல் நூலகத்தைப் போற்றும் பாரதியின் கருத்து மேற்கோளாகக் காட்டப்படுகின்றது. கடைசிப் பத்தியில் திரு.வி.க. வின் கருத்தினோடு இது ஒத்துப் போகின்றது என்றும் சுட்டிக் காட்டிவிட்டுத் திரு. வி. க. வின் கருத்தை நூலில் எடுத்துக் காட்டவில்லை. நூலின் கட்டமைப்பில் விழும் இந்தத் தொய்வினை இனிவரும் பதிப்புகளில் நீக்குதல் நன்று. பக்கம் 29-இல்

நாடுகடத்தல் பற்றிய குறிப்பு ஒன்று வருகிறது. திரு. வி. க. வினை நாடு கடத்தினால் பெருங்குழப்பம் விளையும் என்று இருவர் எச்சரித்தனர் என்பதாக அவரே தமது வாழ்க்கைக் குறிப்புகளில் கூறுகிறார். சம காலத்தவராதலின் அவரது பெயரை திரு. வி. க. குறிப்பிடவில்லை. அற்றைக்காலச் சூழ் நிலையில் அது பொருந்துவதே. ஆனால் அந்த மேற்கோளைக் காட்டி ஒரு கருத்தை நிறுவும்போது 'யார் அந்த இருவர்' என்றும் கண்டறிய முயல்வது ஆராய்ச்சியாளரின் கடமையாகும். திரு. வி. க. வின் வாழ்க்கைக் குறிப்புகளேயன்றி மேலும் பல கட்டுரைகளும் நூல்களும் எடுத்துக்காட்டப்படுகின்றன. இன்றி-யமையாத செய்தி ஒன்றனையும் ஈண்டுக் குறிப்பிடவேண்டும். தந்தை பெரியார் திரு. வி. க. வினைக்குறித்து அவருக்கே உரிய முறையில் தாம் வெளியிட்ட, குடியரசு இதழில் தொடர்ந்து கட்டுரைகளை வெளியிட்டார் என்று தெரிகிறது. நாகர்கோவில் இந்துகல்லூரி நடத்திய கருத்தரங்கு ஒன்றில் தமிழ்த் தென்றலார் பற்றி உரையாற்றிய பின்னர் அந்நகரைச் சார்ந்த ஒரு முதியவர் என்னிடம் இதுபற்றிக் குறிப்பிட்டார். திரு. வி. க. பற்றிய ஆய்வில் ஈடுபட்ட டாக்டர். குழந்தைவேலு ஈரோட்டுப் பெரியாரின் கோணத்திலும் அவரைக் காண்பதற்கு வாய்ப்பு ஏற்படும்.

—திரையன்

(3)

| | | |
|---|---|---|
| நூல் | : | தெலுங்கு ஓரங்க நாடகங்கள். |
| தொகுப்பு | : | எஸ். முத்துகிருஷ்ணா. |
| வெளியீடு | : | சாகித்திய அகாடமி |
| விலை | : | ரூ 25/- |
| பக்கங்கள் | : | 196. |

இலக்கியக் கலையில் நாடகக் கலை மற்ற இரண்டினை-யும் விட வேகமாக மனிதனைச் சிந்திக்கவும், தூண்டவும் வல்லது. நாடகம் எழுதுவது என்பது மிகக் கடினமான ஒன்று. நாடகத்-தின் மூலம் நாடுகள் பல தடம்புரண்டிருக்கின்றன. அரசுகள் பல அடியோடு மாற்றியமைக்கப் பட்டிருக்கின்றன. அத்தகைய ஆற்றல் நாடகம் ஒன்றுக்கே உண்டு.

இந் நாடகம் இந்திய மாநிலங்கள் அனைத்திலும் அவ்வவ் மொழியினரின் உணர்ச்சிகளுக்கேற்ப உருவாகி வளர்ச்சி நிலையை நோக்கி இன்று நடைபோட்டுக் கொண்டிருக்கிறது.

'தெலுங்கு ஓரங்க நாடகங்கள்' என்னும் இந்நூல் நாடக இலக்கியத்தின் போக்குகளையும் நுட்பங்களையும் நன்கு அறிந்த பெருமக்களால் இயற்றப்பட்டவை. சமூகத்தின் பல்வேறு அவலங்களை நாடகத்தின் மூலம் எடுத்துக் காட்டி சமூகத்தை மாற்றியமைத்து விட முடியும் என்பதை இந்நூலில் வரும் நாடகங்கள் மெய்ப்பிக்கின்றன.

'மூலமொழி பிறிதொன்று' என்ற எண்ணம் எழாதவாறு இந்நாடகங்களை மொழி பெயர்த்துள்ள கவிஞர், திருலோக சீத்தாராமும், இளம்பாரதியும் பாராட்டிற்குரியவர்கள்.

'சர்மிஷ்டை' 'அனார்க்கலி' ஆகிய இரண்டும் நம்மை எங்கோ பிறிதோர் உலகத்துக்கு இட்டுச் செல்கின்றன. மற்றைய நாடகங்கள் யாவும் சமூகத்தின் போலித் " தன்மைகளை கிழித்தெறியும் குத்தீட்டிகளாக விளங்குகின்றன. சிந்திக்க வைக்கின்றன. தெளிவை ஏற்படுத்துகின்றன.

தமிழில் இதுபோல் நூற்றுக்கணக்கான நாடகங்கள் வெளிவந்துள்ளன. அவற்றையும் சாகித்திய அக்காதெமியினர் பிறமொழிகளுக்கு வழங்குவது நன்று. அந்நல்ல தொண்டை வரவேற்கின்றோம்.

பேராசிரியர், உலகநாதன் எம். ஏ.,

(4)

| | | |
|---|---|---|
| நூல் | : | நர்மதாசங்கர். |
| ஆசிரியர் | : | குலாப்தாஸ் ப்ரோக்கர். |
| தமிழாக்கம் | : | ஆதவன் சுந்தரம். |
| வெளியீடு | : | சாகித்திய அக்காதெமி |
| விலை | : | ரூ 4/- |
| பக்கங்கள் | : | 106. |

நர்மதா சங்கர், சிறந்த தேசபக்தர், கவிஞர், கட்டுரையாளர், நூலாசிரியர், தலைசிறந்த சமூக சீர்திருத்தவாதி. சுருக்கமாகச் சொன்னால் நர்மதா சங்கர் குஜராத்தி மொழி வசன இலக்கியத்தின் முன்னோடி. அம்மொழியின் சிற்பிகளில் முதன்மையானவர்.

அவர் தொடாத துறைகள் இல்லை. கவிதை, வசனம், வரலாறு, வாழ்க்கைச் சரிதை பற்றியும் அழகியல், யாப்பியல் பற்றியும் இலக்கணம், ஆராய்ச்சி பற்றியும் அவர் எழுதிக் குவித்த

நூல்கள் பலப்பல. சிறந்த உழைப்பாளி. ஒரு மாமனிதர். அவர் எழுதிய நூல்கள் ஏறக்குறைய எழுபத்தாறு. அவரைப்பற்றி வெளிவந்துள்ள நூல்கள் ஆங்கிலத்திலும், குஜராத்திலும் சேர்த்து ஒன்பது நூல்கள். இந்நூல் ஆங்கில நூலின் தமிழாக்கம். 'இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில்' இந்நூல் வெளிவந்துள்ளது. நடை சரளமாக—எளிமையாக—மொழி பெயர்ப்பு என்று அறிந்து கொள்ள முடியாத வகையில் இயல்பாகச் செல்கிறது. தமிழாக்கம் செய்துள்ள ஆதவன் சுந்தரம் பாராட்டிற்குரியவர்.

இந்த இலக்கிய மேதையின் வரலாற்றை ஒவ்வொரு எழுத்தாளரும் வாசகரும் அறிந்து கொள்வது அவர்களின் முதற் கடமையாகும்.

இவ்வரிசையில் இந்திய இலக்கியச் சிற்பிகளாக ஏறக்குறைய முப்பத்தைந்து பேருடைய வரலாறு வெளிவந்துள்ளது. அவர்களில் தமிழில் பாரதியாரும் தமிழ்த் தாத்தா உ. வே. சா. ஆகிய இருவர் மட்டுமே வருகின்றனர்.

இவ்வரிசையில் தமிழறிஞர், மறைமலையடிகளார், திரு.வி.க. பண்டிதமணி, புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார், மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை, கவிமணி, நாமக்கல்கவிஞர், கல்கி போன்றோரும் இடம் பெறல் வேண்டும். சாகித்திய அக்காதெமி கவனம் கொள்ளுமா?

(5)

| | | |
|---|---|---|
| நூல் | : | இயற்கை வடிவங்கள் (பாட்டரங்கப் பாடல்கள்) |
| தொகுப்பாசிரியர் | : | கடவூர் மணிமாறன் எம்.ஏ., |
| பக்கங்கள் | : | 32 |
| விலை | : | 1.50 |
| கிடைக்குமிடம் | : | கனிமொழி பதிப்பகம், கிருட்டினராயபுரம் திருச்சி - 639 102. |

இயற்கை வடிவங்கள் என்னும் இக்கவிதை நூல் நிலம், நீர், தீ, காற்று, வான், என்னும் ஐம்பெரும் பூதங்களைப் பற்றியும் - பாட்டரங்கில் பாடப்பட்ட கவிதைகளாகும். முறையே சத்தியபாமா, கடவூர் மணிமாறன், கருவூர் தமிழ்மணி, கன்னல், எழில்வாணன் என்னும் கவிஞர்கள் இக்கவிதை நூலின் ஆணி-

வேர்கள். அவரவர் எடுத்துக் கொண்ட தலைப்பின் கீழ், - அவற்றின் இயல்புகளை அழகு நலன் கொழிக்கும் அற்புதப் பாடல்களாக — உவமை என்னும் தவலரும் கூத்தி நடனமிடப் படைத்துள்ளமை சிறப்பிற்குரிய ஒன்று, கவிதைகள் எளிமையும், இனிமையும் கொண்டு கற்றோர் போற்றும் பெற்றிமை கொண்டிலங்குகின்றன.

பாவலர் புதுமதியன் தலைமைக் கவிஞராக நின்று கவிஞர்களை அறிமுகப்படுத்தும் பாங்கும் தலைப்பிற்கேற்ப எடுத்துக் கொடுக்கும் சிறப்பும் பாராட்டிற்குரியது.

(6) நூல் : ஸ்ரீலங்காவின் தேசியத்தற்கொலை
ஆசிரியர் : பிருமின் தர்மோத் ஜீவராமு
வெளியீடு : பரிவர்த்தனா பப்ளிஷர்ஸ்
4/A டைரக்டர்ஸ் காலனி
சென்னை - 24
விலை : ரூபாய் ஆறு.

1983 - ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் ஈழத்தீவில் இந்திய வமிசாவழியினர் திட்டமிட்டுத் தாக்கப்பட்டனர். கொள்ளையும் கொலையும், கற்பழிப்பும் சூறையாடலும் இரவுபகலாக நடத்தப்பட்டன. அடுத்த கட்டமாக யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும் இந்தக் கதியே ஏற்பட்டது. ஈழத்து இராணுவமும், காவல்துறையும் சேர்ந்து தமிழினத்தை அழிக்கத் தொடங்கின. இந்த அட்டூழியத்தைக் கேட்டு தாய்த்தமிழகம் கண்ணீர் சிந்தியது. இலங்கைத் தமிழரோ ஐரோப்பிய நாடுகளிலும் இந்திய மண்ணிலும் அடைக்கலம் புகுந்தனர். பல்லாயிரக்கணக்கான குடும்பங்களைக் கொன்று குவித்து இரத்த வெறி பிடித்து அலைந்த சிங்கள ராணுவத்தை அகில உலக ரீதியில் தட்டிக்கேட்க நாதியில்லை. இமயத்தின் மடியில் திம்பு நகரத்தில் இருதரப்பும் அமர்ந்து பேசும் இன்றைய நிலையில் இச்சிறிய நூல் வெளிவந்துள்ளது. சிங்களருக்கு முன்னமேயே தமிழர் அத்தீவில் குடியேறியவர்; இந்திய வமிசாவழியினரோ வெள்ளையராட்சியில் கட்டாயமாகக் கொண்டு செல்லப்பட்டவர் என்ற கருத்தோடு தொடங்கும் இந்நூலின் முதல் 23 பக்கங்கள் இந்த இரண்டு இனத்தவருமே தொடக்க கால முதல் இத்தீவுக்குரியவர்கள் என்பதை வரலாற்று ரீதியில் ஆய்கிறது. சிங்களரும் தமிழரும் ஒரே திராவிட இனத்தவர் என்று கூறும்

இந்நூலாசிரியரின் கருத்து நடப்பு நிலைக்கு முற்றிலும் வேறானது. இந்நிலையில் ஈழத்தின் ஒட்டு மொத்தமான தேசீயம் என்பது ஏட்டுச்சுரைக்காய்தான்.

1974 - இல் உலகத்தமிழ் மாநாடு போலீசாராலேயே தாக்கப்பட்டதனைச் சுட்டிக் காட்டி, தமிழிலக்கியம் அறிந்த சிங்கள அறிஞர்களை, கலைஞர்களை அம்மாநாட்டுக்கு அழைத்திருக்கலாம் என்பது நல்ல கருத்து. இந்த சகோதர உணர்வு இலக்கிய, மத, அரசியல் தொடர்புகளில் ஊடுருவி இருந்தால் படுகொலைகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்பது பொருத்தமே. ஏறத்தாழ ஒரு இலட்சம் நூல்களடங்கிய யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது ஆசிரியர் கூறுவது போன்று ஒரு காட்டு மிராண்டித்தனமான செயல்தான். சிறையிலும், வெளியிலும் தமிழ்க்குடி மக்களைக் கொன்று குவித்த ராட்சதக் கும்பலுக்கு வெளிநாட்டு ரசாயன லாகிரி கொடுக்கப்பட்டிருந்தது என்பது இதுவரை வெளிவராத அதிர்ச்சி தரும் செய்தி. சிந்தனையாலும் செயலாலும் பிளவுபட்டுக் கிடக்கின்ற ஈழத்தில் ஜீவராமு எதிர்பார்க்கின்ற தேசீய உணர்வு பிறக்குமா? வன்பெருங்கற் பாறையில் வாழையினைப்பயிர் செய்ய முடியுமா? தேசீய உணர்வு வேண்டும் என்று சுட்டிக்காட்டுகின்ற ஜீவராமு வேறுசில நடைமுறைக்கு ஒத்து வரும் சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

— பொறுப்பாசிரியர்

—(O)—

(7) நூல் : வரதட்சணைப் பேய்
ஆசிரியர் : பி. ஏ. ஏ
வெளியீடு : குட்வில் பப்ளிஷர்ஸ்
5, அப்பாவு கிராமணி சந்து
எல்லிஸ் ரோடு - சென்னை - 2
விலை : ரூபாய் ஐந்து

இந்தியாவின் வட மாநிலங்களில் தலைவிரித்தாடும் வரதட்சணைக் கொடுமை தமிழகத்திலும் இல்லாமல் இல்லை. சட்டரீதியாகவன்றி சமூகரீதியில் ஒழிக்கப்படவேண்டிய இக்கொடுமையினை இந்நூல் பல்வேறு வகையாலும் கண்டிக்கிறது. நூலின்

முதற் கட்டுரை அன்றாடம் வெளிவரும் நடப்புச்செய்திகளின் தொகுப்பாகக் கதைபோல் அமைந்துள்ளது.

பெண்ணின் பணத்திலே வாழ நினைப்பது பிச்சை எடுத்து வாழ்வதை விடக் கேவலம் என்றும் மானவெட்கம் இருந்தால் எந்த ஆணும் பெண்ணிடம் பணம் கேட்கக்கூடாது என்றும் இந்நூலாசிரியர் கண்டித்துப் பேசுகிறார். வியாபாரமாகவே சமூகத்தில் பரவியுள்ள இக்கொடிய பழக்கத்தைக் கண்டித்துப்பேச விரும்புவோருக்கு இந்த நூல் ஒரு கையேடாகப் பயன்படும். குமரிகள் என்னும் சொல்லை 'குமருகள்' என்று எழுதுவது பொருத்தமாகத் தெரியவில்லை. அடுத்த பதிப்பிலாவது இச்சொல் திருத்தப்பெறின் நல்லது.

(8) நூல் : தேன் சிட்டுகள் (சமூகக்காவியம்)
— கவிஞர் ஏகாந்தன்
ஏகாந்தன் பதிப்பகம்
6, வெங்கடேசன் ஆலி
சென்னை-18
விலை - ரூ. 6. 50

கவிஞர் ஏகாந்தனின் இந்தக் கவிதை நூல் சமுதாயத்தில் கறை படிந்த வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த ஒரு குடும்பத்தின் கதை. கதையினை அறிமுகப்படுத்தியிருக்கும் முறையில், ஆசிரியர் நெஞ்சு நிமிர்ந்திச் சொல்லுவதே போன்று துணி அவிழ்ப்பும், தோலுரிப்பும் நிறைய இருக்கின்றன. புதுக்கவிஞராகச் சொல்லிக் கொள்ளும் போலிப் புலமைகளுக்கு இந்நூலாசிரியரின் விறுவிறுப்பானதும் பாராட்டத்தக்கதுமான முன்னுரை கசப்பாகத் தான் இருக்கும். கவலையுறத் தேவையில்லை.

'சிந்திக்கும் வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்ற திரையினை விலக்கி விட்டு 'மணமானவர்களுக்கு மட்டும்' என்று போட்டிருக்கலாம். ஏனெனில் செல்விக்குத் தாய் உபதேசம் செய்வதாக வரும் பகுதிகள் சற்று விரசமாக உள்ளன. சரவணப் பெருமாள் கவிராயரின் சேதுபதி விறலிவிடு தூது எனும் நூலை ஆசிரியர் ஆழ்ந்து கற்றிருப்பாரோ என்று தோன்றுகிறது. அந்நூலுக்கு ஏற்பட்ட கதி இச்சிறு காப்பிய நூலுக்கு ஏற்பட்டு விடக் கூடாது. விலைமகளாக வாழ்க்கையை ஒட்டியவளாயினும் ஒரு தாய்

தன் மகளுக்கு யாரும் வெறுக்கத்தகும் யோசனையை பலபடப் பேசுவாளா என்பதை எண்ணிப்பார்க்க முடியவில்லை.

'—— —— மாதவி மகள் மணிமேகலை
அருந்தவப்படுத்தல் அல்லது
திருந்தாச் செய்கை தீத்தொழிற் படாஅள்'

என்று சொன்ன தாய்க்குலப் பாரம்பரியம் இன்னும் மடிந்துவிட வில்லை. சின்னச்சாமி என்னும் கதாபாத்திரச்செயல்கள் கண்டிக் கத்தக்க முறையில் பேசப்படுகின்றன. ஆபாசக்குட்டையினுள் பேனா முனை ஈண்டு அமுத்தித் தோய்க்கப்பட்டுள்ளது.

'தீங்கு தரும் வாழ்க்கையிலே ஆசை வந்தால்
திருட்டினிலே அதைச் செய்யத் தேவையில்லை'

என்று கூறி மணமுறிவுக்கு வழி காட்டுவதை விடுத்து, அதனைத் தொடர்ந்து எட்டுப்பாக்களில் பெண்களைக் கடிந்து திட்டுவதை யும் ஒதுக்கி, மனம் போனபோக்கெல்லாம் போகவேண்டாம் என்று அழுத்தமாகவும் அன்போடும் அறிவுரை கூறியிருக்கலாம். ஒட்டு மொத்தமாக நூலைக் காணும்போது, நூலாசிரியர் திட்டும் கலையில் தேர்ந்தவர் என்று தெரிகிறது.

பக்குவமாகக் கண்டிக்கும் பாங்கினுக்கு அறிவு முதிர்ச்சியோடு வயது முதிர்ச்சியும் வேண்டுமன்றோ! இருப்பினும் சென்னையில் அன்பரசனைப் பற்றி எழுதப்படும் பாக்கள் பாராட்டத்தகுவன. கையூட்டை நச்சி தகுதியைத் தள்ளி விடும் தரங்கெட்டோரை எதிர்த்து முன்னேறும் அன்பரசன் இளந்தலை முறைக்கு ஒரு எடுத்துக்காட்டு. சொல் ஆளுமையும், சரளமான நடையும் கவிதை யோட்டமும் கைவரப் பெற்றவர் ஏகாந்தன் என்பதில் ஐயமில்லை. கறை படிந்த சமுதாயத்தின் மீது காட்டிய தனது ஆழ்ந்த கவனத்தையும், ஆற்றல் மிகு புலமையினையும், சமுதாயத்தின் நல்லியல்புகளைப் பாராட்டுகின்ற காவியத்தின்பால் திருப்ப வேண்டும் என்பது எமது வேண்டுகோள்.

—பழநி. அரங்கசாமி

(9) ## நூல்: கந்தர் கலித்துறை

ஆசிரியர். வை. தங்கமணி. எம்.ஏ., பி.லிட்.
வெளியீடு : ஆசிரியர் : திருமங்கலம்

மணங்கமழ் சோலை அணிசூழ்ந்த வெள்ளிமலையதனில் அணியாகநின்ற 'குமரனைக்' கவிதைமலர்களால் பாமாலை சூடிக் ''கந்தர் கலித்துறை'' என்னும் பக்திப் பனுவல் தந்துள்ளார் திருமிகு வை. தங்கமணி என்னும் தமிழறிஞர். பிஞ்சுக் குழந்தை பிதற்றும் மொழிகளை நஞ்சுக்கிளவி என எவரும் நினைத்-திடார்''— அது போலவே தன் கவிதைகளைக் கொஞ்சும் மழலையாகக் கொள்ளவேண்டுமென்று அவையடக்கத்தில் கந்தனிடம் கெஞ்சுகிறார். ஆனால் அத்தனையும் செஞ்சொற் கவிதைகளாக மிளிர்கின்றன.

கலிவெண்பா யாப்பில் 'கந்தர் கலிவெண்பா' எனும் நூலியற்றிய குமரகுருபரரைப் போன்றே கலித்துறை யாப்பில் கந்தன் பெருமைகளை, அவன்வரலாறுகளைப் பக்திச்சுவையோடு கந்தர் கலித்துறை என்னும் நூலாகத் தருகிறார் இந்நூலாசிரியர்.

நூலுள் நூறுபாடல்கள் உள்ளன. அனைத்தும் அந்தாதியாக அமைக்கப்பட்டுள்ளன.

'கண்ணுள் புகுந்து கருத்துள் நடமிடும் முருகனின் நற்பெயரை நாவால் நவிலுவது இன்பம்; அவன் பொற்பதியைப் போற்றிப் புகலுவது இன்பம்; பொழுதும் அவன் நற்பணி ஏத்தி இயம்புவது இன்பம்' (20) என்று கந்தன் புகழ் பேசுதலே தனக்கின்பம் என்கிறார். ஒவ்வொருவரும் கந்தனைப் பார்ப்பதையும், அவன் புகழ் பாடிப் பரவி உருகுவதையும் பண்பெனக் கொள்ளவேண்டும் என்ற பக்தி உணர்வுகளையும்; செல்வம் உடையவர் ஏழைக்கிரங்கி இன்னலைப் போக்க வேண்டுமென்ற நீதி உணர்வுகளையும் (23) பாடல்களினூடே பகரும் ஆசிரியரின் திறம் பாராட்டுதற்குரியது.

"அப்பனே கேட்கப் பிரணவம் கூறிய சான்றவன்" (35)
"பத்தியாய் நமதன் செய்வேள்வி வந்த தகரதனை

அத்தமே கொள்ள வலியழித்தவன்" (40)

"நொந்து சற்புத்திரன் கூவ விரைந்து குப்கரிக்கு
முந்தியே தோற்ற மளித்த சரவணன்" (49)

"பகீரதன் நோன்பிருக்கத் துணையாக நின்றான்" (57)

"சந்தத் தமிழினைக்கேட்டிடக் காட்டினான் நல்கிகண்டிக்கு (51)

"விந்தம் உடைத்து நக்கீரனைக் காத்திட வந்த குகன் (37)

"முந்தியே மூங்கையாய் வந்து முழுப்பொருள் தந்தவன்" (48)

போன்ற புராண வரலாற்றுச் செய்திகளால் முருகனின் பெருமைகள் உரைக்கப்பட்டுள்ளன.

முருகன் உறையும் வெள்ளிமலையின் இயற்கைச் சூழல் ஆசிரியரின் கற்பனை வளத்தால் கவின் பெறுகிறது.

சிவமே முருகு, முருகே சிவமாய்ப் பிரிவிலாதிருக்கும் முருகன் தமிழ்க் கடவுள் ஆதலால், தமிழால் பழித்தாலும் அவன் பாசமுடன் அருளுவானாம். (90), கனிதமிழ்ச் சொல்லால் ஆசிரியர் அழைப்பதால் அவன் ஓடவழியில்லை. எனவே அழிபாடிலாத மொழியால் "கந்தன் கலித்துறை" என்ற நறுந்தொடையல் (3) படைக்கப்பட்டுள்ளது. இந் நறுந்தொடையலின் மணம் கற்பார் மனங்களில் நின்று நிலவுதல் தேற்றம்.

—வீ. காந்திமதி எம்.ஏ.

## நீடித்த வாழ்வு

மனிதன் நூறு ஆண்டுகள் வாழ்வான் என்பது ஒரு நம்பிக்கை தான். நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகி நடைமெலிந்தாலும், வாழ்ந்து கொண்டிருப்பவரும் உண்டு. நாற்பது அல்லது ஐம்பது வயதை எட்டிப்பிடிப்பதற்குள் மூச்சடங்கிப் போவோரும் உண்டு. கலப்படமான உணவும், நெருக்கடியும், நச்சுக்காற்றும் தூய்மைக்குறைவும் மலிந்து கொண்டு வருகின்ற இந்நாட்களில் உலக வாழ்வுக்கு உறுதியில்லை. வாழ்க்கையில் அறுபது வயது வரை வாழ்ந்தால், அது ஒரு பெரும் சாதனை என்று சொல்லலாம். எனவேதான் கணவனுக்கு அறுபது வயது நிரம்பியதும் கணவன்-மனைவி மறுதிருமணம் நடத்தி விழாக் கொண்டாடுகின்றனர். அதிலும் ஒரு வேறுபாடு. மனைவிக்கு அறுபது வயது நிரம்பியதா என்பது பற்றிக் கவலையில்லை. கணவனை மையமாக வைத்தே இந்த அறுபதாம் கல்யாணம் நடக்கிறது. மகளிர் சங்கங்கள் இதனைப் பற்றி இன்னும் சிந்திக்க வில்லை போலும்.

நூறு ஆண்டுகள் வாழ்வது எப்படி என்ற நூலை எழுதிய மறைமலையடிகளார் கூட 74 - ஆம் வயதில் மறைந்து விட்டார். அண்மைக்காலம் வரை நம்மிடையே வாழ்ந்த மூதறிஞர் இராஜாஜி, தந்தை பெரியார் ஆகியோர் தொண்ணூறு வயதைக் கடந்தவர்கள். நெடுங்காலம் வாழ வேண்டும் என்னும்ஆசை நம்மில் பலரை விட்டபாடில்லை. உடலுறுப்புகளின் இயக்கம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து போய், முடி நரைத்து, கண்ணில் திரை படர்ந்து மூப்பு ஆளுகை புரிகின்ற காலம் வரை நாம் உயிரோடிருக்க வேண்டுமா என்று கேட்கும் லட்சியவாதிகள் இச்செய்தித் துணுக்கைப் படிக்க வேண்டாம்.

வாழ்வதும் சாவதும் நம் கையில் இல்லை. மூச்சு இருக்கின்ற வரையில் நோய் நொடியின்றி வாழ்ந்து மறைவோம் என்று எண்ணுகின்றவர்கள் கீழ்வரும் அனுபவ உண்மையினை அறிந்து கொள்ளலாம். ஒரு மான நஷ்ட வழக்கில் நேரில் சென்று அமெரிக்க வழக்கு மன்றத்தில் தனது வாக்கு மூலத்தைக் கொடுத்து விட்டு வந்துள்ள முன்னாள் இந்தியப் பிரதமர் 1985-இல் 90-வயது நிரம்பிய மொரார்ஜி தேசாயின் கருத்துகளே இவை. தூய்மையான பழக்க வழக்கத்தில் நிம்மதியான வாழ்வு உறுதி. மனச்சான்றுக்கும் கடவுளுக்கும் பயந்து நடந்தால்

நிம்மதி உண்டு. இரத்த அழுத்தத்தை உண்டு பண்ணும் கவலையோ, படபடப்போ அடையக் கூடாது. எதிலும் நிதானம் தேவை. இயன்ற வரை வயதுக் கேற்ற உடற்பயிற்சி செய்ய வேண்டும். உடற்பயிற்சி இயலாவிடின் அன்றாடம் நடந்து பழக வேண்டும். சிறையில் இருந்தபோது கூட அந்த அறைக்குள்ளேயே சுற்றிச்சுற்றி வருவேன். கடவுள் நம்பிக்கை, இலேசான உடற்பயிற்சி இவையிரண்டோடு இன்னொரு முக்கியமான செய்தியும் உண்டு. உணவுப் பழக்கத்தில் மிகுந்த கட்டுப்பாடு வேண்டும். என்னுடைய 35-ஆம் வயதிலேயே கடுமையான உறைப்பு, காரம், எண்ணெய், மசாலா ஆகியவற்றை ஒதுக்கி விட்டேன். கடந்த சில ஆண்டுகளாக கோதுமை உணவையும் தள்ளி விட்டேன். பச்சைக் காய்கறிகளை அளவோடு மிக மெல்லிதாக சீவி அவற்றை நன்றாக மென்று விழுங்குகிறேன். அண்மையில் கடுமையான நோய் எதுவும் வந்ததாக எனக்கு நினைவில்லை. எனது 50-ஆம் வயதில் 1934 - இல் ஒரே ஒரு முறை மட்டும் மலேரியாக் காய்ச்சல் வந்தது. பதின்மூன்று நாட்கள் உண்ணாவிரதம் இருந்து அந்நோயைத் தொலைத்தேன். சில சமயங்களில் ஒரிரு நாட்கள் சாதாரணமாக சளி, இருமல் ஏதாவது வரும். ஆயுர்வேத மருந்துகள் சாப்பிடுவேன். அவ்வளவே. ஆங்கில மருந்துகளை (allopathy) க் கையாலும் தொட்டது இல்லை. இம் மருந்துகள் தலைவலியைப் போக்கினாலும் திருகு வலியைக் கொண்டு வந்து விடும். எனக்கு அவற்றில் நம்பிக்கை இல்லை.

மொரார்ஜி தேசாயின் இன்னொரு கருத்து யாரும் எளிதில் ஏற்றுக் கொள்ள இயலாத ஒன்று. சிறு காயம் ஏதேனும் ஏற்பட்டு அது உடலில் நஞ்சாக மாறிவிட்டாலோ (Septic), அழுகி விட்டாலோ ஒருவன் தனது சிறுநீரையே காலையில் வெறும் வயிற்றில் அருந்த வேண்டும் என்பது. இயற்கை வைத்திய முறையில் (Naturopathy) இது இன்றியமையாத ஒன்று என்கிறார் அத்தொண்டுகிழவர். ஆயினும் உலக வாழ்க்கையில் ஆசை கொண்டு தான் இவற்றையெல்லாம் அவர் கூறுகிறார் என்று எண்ணவேண்டாம். இருக்கும்வரை நலமுடன் இருப்போம். ஆண்டவன் அழைக்கும்போது எந்த மணித்துளியிலும் புறப்பட்டு விடுவேன் - இதுவே அவரது உறுதியான எண்ணம்.

# சைவமும் வள்ளலாரும்

டாக்டர். பி. ஆர். நரசிம்மன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

நான்காவதாகிய ஞானமார்க்கம் சன்மார்க்கம் என வழங்கப் படும். சைவ சித்தாந்திகள், வள்ளலார் மட்டுமின்றி, அனைத்து வேதங்களும் பண்டைய சாத்திரங்களும் ஞானத்தையே முக்திக்கு நேரான வழி என்று ஒரே முகமாகக் கருதுகின்றன. உண்மையான மெய்யறிவு மெய்ஞானம் எழுந்தவுடன் அஞ்ஞானம் மறைந்து, அதன் பயனாகத் தளையும் அகன்று முக்தி விளைகிறது உண்மை யறிவு பதிஞானம் அல்லது இறையறிவு ஆகும். இதனைத் திருமூலர்.

"ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முக்தி நல்காவாம்
ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே" என்றார். இந்நான்கு

மார்க்கங்களில் ஒவ்வொன்றையும் தனித்தனியே முடிந்த நெறி-களாக கருதுதல் கூடாது.

அவை ஒரு தொடர்ந்த ஆன்மீக வளர்ச்சியின் பலபடிகளே ஆகும், தாயுமானவர் அவற்றை மொட்டு, பூ, காய், பழம் ஆகியவற்றுடன் ஒப்பிடுகின்றார்.

"விரும்புஞ்சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமலர் காய்கனி போல் அன்றே பராபரமே"

ஞானத்தினால் ஆன்மா சாயுச்சிய நிலையை, தெய்வீகக் கூட்டுப்-பேற்றைப் பெறுகின்றது. திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் ஞானமார்க்கத்தின் தலைசிறந்த விளக்கமாவர்.

சைவ சித்தாந்திகள் நான்கு மார்க்கங்களைக் கூறி அவற்றை விடு பேற்றைப் பெரும் வழியில் உள்ள நிலைகளாகக் கருத, வள்ளலார் 'திருநெறி' ஒன்றே; அதுதான் சமரச சுத்த சன்மார்க்க சிவநெறி என்று உணர்ந்து உலகீர்; சேர்ந்திருமின் எனவும், "என் மார்க்கம் சிறப்பொழிக்கும் சன்மார்க்கந்தானே" எனவும் கூறுகின்றமையால் அவர் சன்மார்க்கம் அல்லது ஞான மார்க்கத்தை மட்டுமே உய்விற்கு வழியாக உலகத்திற்கு அளிக்கின்றார். மற்றைய மார்க்கங்களை பல நிலைகளாகவோ,

சிறப்பாகவோ அவர் குறிப்பிடாவிடினும் அவைகளை மறுத்-தாரில்லை. அவற்றுக்குப் பதிலாக எல்லாச் சிறப்பையும் சன்மார்க்க நெறிக்கே அளித்துள்ளார். அவரின் கருத்துப்படி 'எல்லா மக்களும் எல்லா மதத்தினரும், எல்லா இனத்தவரும், எல்லா நாட்டினரும் வேற்றுமையின்றி வாழவேண்டும். ஏனெனில் அனைத்து மக்களும் இயற்கையுண்மை ஏகதேகங்களாகக் கடவுள் இயற்கை விளக்கமாகிய அருளுக்கு இடமாக இருக்கின்றவர்கள். இறைவன் சோதிவடிவானவன்; கருணை அருள் உள்ளவன்; இந்த இரண்டின் கூட்டுறவே சன்மார்க்கம்; ஆதலின் ஜீவர்கள் கடவுளின் இயற்கை விளக்கமாக இருத்தலின் அனைவரும் ஜீவர்கள் மேல் காருண்யம், தயவு; அருள் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அருள் என்பது கடவுள் தயவு; ஜீவகாருண்யம் என்பது ஜீவன்களின் பெருநோயா-கிய பசியைத் தீர்த்தலும், கொல்லாமையைக் கடைப்பிடித்தலுமே ஆகும். இதனையே வள்ளலார் ஆன்ம லயம் என்கின்றார். 'தயை-யுடையாரெல்லாரும், அருளுடையரெல்லாரும்,சன்மார்க்கம் சார்ந்தவரே' ஜீவகாருண்ய ஒழுக்கத்தால் மட்டுமே கடவுள் அருளைப் பெற்று மலங்களை நீக்கப் பெறலாம். ஜீவகாருண்யத்துடன் மலங்-களை நீக்க வள்ளலார் தனித்திரு, விழித்திரு, பசித்திரு என்னும் உபதேசங்களையும் அருளுகின்றார். இவற்றின் பொருள் எப்பொழுதும் தனிமையை நாடி மன அமைதியைப் பெருக்குவதும், ஆண்டவன் அருள் எந்நேரத்தில் கிடைக்குமோ என்று எந்நேரமும் அந்நோக்கம் உடையவராயிருத்தலும், ஆண்டவனிடம் கொள்ளும் அருட்பசியும் ஆகும். வள்ளலார் சன்மார்க்க நெறியில் அனைத்து தீவினைகளுக்கும் காரணமாகப் பசியினைக் குறிப்பிடுகின்றார். அதனை நீக்கவே சத்திய தருமச் சாலையைக் கண்டார். பசிப்பிணி ஜீவகாருண்ய ஒழுக்கத்திற்கு ஒரு உந்துதலாக உள்ளது என்கிறார். இதனையும் இறைவனின் அருளே என்கிறார்.

சைவசித்தாந்திகள் நால்வகை மார்க்கத்திலும் வள்ளலாரின் ஒரே மார்க்கத்திலும் இறைவனிடம் முறையிடுதல் வேண்டும் என்பது பொதுவாக இருக்கின்ற ஒன்று. இதனைத் தாயுமானவர் "ஆணவத்தோடத்து விதமானபடி மெய்ஞானத் தாணுவினோடத்து விதஞ்சாரு நாள் எந்நாளோ" என்று ஏங்குவதிலும், வள்ளலார் "அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்" என்று வாயார வணங்குவதிலும் உணரலாம்.

இவ்வாறு மார்க்கங்களைக் கடைப்பிடித்து ஒழுகி ஆன்மா உலகப்பற்றை விட்ட நிலையில் ஆன்மாவின் வீடுபேறு மூன்று நிலைகளில் தொடங்குகின்றது சைவ சித்தாந்தத்தின் படி அவை இருவினையொப்பு மலப்பரிபாகம். சக்தி நிபாதம் என்பன. இம் மூவகை நிலைகளையும் கடந்தவுடன் ஆன்மா ஜீவன் முக்தனாக மாறுகின்றது. இவ்வுடம்பினுள் உள்ள போதே உடம்பைவிட்டு நீங்கிய பின் விதேக முக்தியைப் பெற்று இறைவனுடன் தன் சுய உருவத்துடன் என்றும் இணைபிரியாது இருக்கின்ற சாயுச்சிய நிலைய அடைகின்றது. இந்நிலையில் ஆன்மா இறைவனின் பேரொலியுடன் இணைந்து பேரின்பம் அடைகின்றது.

வள்ளலார் கூறும் சன்மார்க்க நெறியைப் பின்பற்றி ஒழுகி வாழ்ந்தால் மரணமில்லாப் பெருவாழ்வையும், சைவசித்தாந்தம் கூறுகின்ற அத்துவித நிலையையும் அடையலாம். இதனை வள்ளலார் 'அது நானாய், நானதுவாய், அத்துவிதமாகி நின்றேன்' எனவும், 'நானானான் தானானான் நானும் தானுமானான்' எனவும் தெளிவாக கூறுகின்றார்.

4. சடங்கியலில் (Religion) கோயில் வழிபாடு, விழா, பூஜை முதலியனவும், மற்றும் சமய சாஸ்திரங்களின் சொல்லப்பட்ட மனித வாழ்வின் தருமங்களும் அமையும். இவைகளை சைவ சமயத்திலும் வள்ளலாரின் சித்திவளாகத்திரு வழிபாடு முதலிய வற்றிலும் சமய குரவரின் வாழ்க்கையிலும், வள்ளலாரின் வாழ்க் கையிலும் அவர்கள் செய்த வழிபாடுகளிலிருந்தும் நாம் அறியலாம்.

இவ்வாறு தொடக்கம் முதல் இறுதிவரை வள்ளலாரின் கருத்துக்கள் சைவசித்தாந்தக் கருத்துக்களை ஒத்திருப்பதை நாம் காண்கின்றோம். அனைத்திற்கும் மேலாக வள்ளலார் சமய குரவர் களை தன்வழிகாட்டிகளாகக் கொண்டிருந்தார். அவர்கள் மேல் அவருக்கு இருந்த பற்றினை அவரின் "ஆளுடைய பிள்ளையார் அருள் மாலை", "ஆளுடைய அரசு அருள்மாலை", "ஆளுடைய நம்பிகள் அருள்மாலை", ஆளுடைய அடிகள் அருள்மாலை" ஆகிய வற்றின் மூலம் அறியலாம். இவை நான்கும் தேவாரம் பாடிய

மூவரையும், திருவாசகம் தந்த வாசகப் பெருமானையும் முறையே பாடப்பெற்ற பாடல்கள் ஆகும். அவர்கள் ஆற்றியது பெருமானை யும்முறையே பாடப்பெற்ற பாடல்கள் ஆகும். அவர்கள் ஆற்றியது போன்றே வள்ளலாரும் சமயத்திற்கும், மக்களின் சேவை மூலம் மகேசனுக்கும் சிறந்த தொண்டாற்றியவர். சைவசமயம் ஆள் சார்புள்ள இறைவனை வழிபடுவது; வள்ளலாரின் சமயம் சோதியை வழிபடுவது. இம்முரண்பாடு மிகப்பெரிய முரண்பாடாகக் கருதல் இயலாது. ஏனெனில் இறைவன் அனைத்துங்கடந்த நிலையில் சோதியாக, வெளிச்சமாக இருப்பவன். எனவே வள்ளாலாரின் சமரச சுத்த சன்மார்க்கம் சைவ சமயத்தை ஒத்ததே ஆகும்.

## சங்கச் செய்தி

தமிழ்ச் சங்கச் செயலாளரும், மதுரை மாநகரின் வழக்கறிஞருள் தலைமையிடம் பெறத்தக்க வருமாகிய உயர்திரு. என். எஸ். முத்துமலைச்சாமி அவர்கள் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பேரவையின் (Senate) உறுப்பினராக மதுரைத் தமிழ்ச் சங்க உறுப்பினர்களால் ஏகமானதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். செப்டம்பர் திங்கள் இரண்டாம் வாரத்திலிருந்து மூன்றாண்டுகள் பேரவை உறுப்பினராகப் பணிபுரியும் வாய்ப்பினைப் பெற்ற சங்கச் செயலாளர் தம் தமிழ்ப்பற்றும், ஆக்கபூர்வமான யோசனைகளும் அப்பல்கலைக் கழகத்திற்குப் பெரிதும் பயன் விளைக்கும்.

—பழநி. அரங்கசாமி

# பழமையும் புதுமையும்

(நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா)

புலவர். பொன். முகிலன் எம்.ஏ.

—தரவு—

பழமையெல்லாம் பழிப்பிற்கும் பகடிக்கும் உரியதென
இழப்பமுடன் உரைத்தின்ப எழுச்சிமிகப் பெறுவதுவும்
புதுமையெல்லாம் உயர்வுக்கும் புகழ்ச்சிக்குந் தகுந்ததென்று
கதுமெனவே கழறியதைக் கடைபிடிக்கும் மடத்தனமும்
முன்னேறும் வழியடைத்து முறையில்லாச் செயல்களினால்
பின்தங்கும் நிலைதந்து பேதைமையை வளர்க்குதுகாண்.

—தாழிசை—

பிறநாட்டு பயன்தாராப் பெருமூடப் பழமையைபோல்
அறத்தோடு திருவளர்த்த அருந்தமிழர் பழமையையும்
தரமற்ற தெனநினைத்துத் தகுதியினை உணராமல்
புறக்கணிப்பாய் இயங்குவது புரைகளையே நிறைவ்க்கும்.

கடைக்கழகக் காலத்தைக் கடந்தெழுந்த சிலபழமை
இடையூறாய், அறிவழிக்கும் இழிகதையாய் இருப்பதுண்மை
அடைந்திங்கே நுழைந்துவந்த ஆரியரால் விளைந்தது
தடையுடைத்த வளர்சிறப்பைத் தமிழ்ப்புலமை தெரிவிக்கும்

கடல்கொண்ட குமரிநலக் கவின்பறப்பில் பிறந்ததுவும்
தடம்அழியாப் புலம்வளர்த்த தமிழ்க்கழகத் தனிப்பாங்கும்
அடர்த்தபகை புறங்கண்டு அழியாத முதன்மொழி
யாய்ப்

படர்ந்தோங்கும் தமிழ்ப்பழமை பயன்களையே அறிவிக்கும்

—தனிச்சொல்—

எனவே,

—சுரிதகம்—

| | | | |
|---|---|---|---|
| முழுகிய | தமிழ்நில | முதுபழம் | மரபால் |
| வழுவிலா | நலங்களே | வளர்வதை | உணர்மின்! |
| பிறவழி | கடன்பெறும் | பிழைமிகு | புதுமையால் |
| உறவுகள் | பிறழ்ந்திடும் | உயர்வுகள் | ஒழிந்திடும் |
| அவரவர் | பழமையின் | அடிமுதல் | |
| சிவணிய | புதுமையே | சிறப்பினை | விளைத்திடும். |

# மலையாளத்தில் தமிழ் இலக்கியங்கள்

இந்தியத் துணைக் கண்டத்தின் தென் கோடியில் கேரள மாநிலத்தில் இரண்டுகோடி மக்களால் பேசப்படுவது மலையாள மொழியாகும். திராவிட மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், துளு ஆகியவற்றோடு ஒருங்கு வைத்தெண்ணப்படும் மலையாளம் தமிழிலிருந்து உதித்தெழுந்த கிளை மொழியே என்பது மொழி இயலாரின் கருத்து.

கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும்
உன்னுதரத்தே உதித்தெழுந்து ஒன்றுபல ஆயிடினும்

என்று கூறும் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையின் தமிழ் மொழி வாழ்த்து ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. 'செந்தமிழே கொடுமலையாளம்' என்னும் உலக வழக்கும் இதனையே வலி யுறுத்துகிறது. முதன்முதலாக திராவிட மொழிகளின் ஒப்பிலக் கணம் (1856) கண்ட கால்டுவெல் அய்யர் அவர்களும் இக் கருத்தினையே கூறிப் போந்தார். மலையாள இலக்கிய வரலாறு எழுதிய பரமேச்வரன் நாயர் இக்கருத்தை முழுமன தாகக் கொள்ளவும் இல்லை; தவறென்று தள்ளவும் இல்லை. தமிழிலிருந்து மலையாளம் பிறந்ததாகக் கொண்டாலும், காலப் போக்கில் வடமொழிச் சார்பும் செல்வாக்கும் அம்மொழியில் அதிகமாகப் போய்விட்டது என்பதே உண்மை. "தாயின் தொடர்பை நீத்துத் தனித்தப்பட்ட வேற்றுருவைக் கொண்ட மகளொருத்தியைப் போன்றாய்விட்டது மலையாளமொழி" என் பர் கால்டுவெல்.

மலையாள மொழியின் இலக்கிய வயது நானூறு என்று கூறலாம். மேற்குக்கடற்கரைப் பகுதியில் காணப்படும் சில கல் வெட்டுக்களைச் சான்றாகக் கொண்டு மலையாள மொழி கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலேயே எழுத்து உருவம் பெற்றிருக்கிறது. என்று கருதப்படுகிறது. ஆயினும் இலக்கியத் தோற்றம் துஞ்சத்து எழுத்தச்சன் காலமாகிய பதினாறாம் நூற்றாண்டிற்குப் பின்னர் தான். எனவே பிறமொழி இலக்கியங்கள் இம்மொழியில் பெயர்த் தெழுதற்குரிய வாய்ப்பும் அக்காலக்கட்டத்திற்குப் பின்னரே என்பது தெளிவு.

(i) திருக்குறளின் முதல் 250 பாக்கள் மலையாளத்தில் பெயர்க்கப்பட்ட தமிழ் இலக்கியங்களுள் காலத்தால் முற்பட்ட தாகும். எட்டுச்சுவடியாக இருந்த இம்மலையாளப் பிரதியை எல். வி. இராமசாமி அய்யர் 1938-ஆம் ஆண்டு வெளிக்கொணர்ந்து உரையும் விளக்கமும் கொடுத்து அச்சேற்றினார். இம்மலையாள மொழிபெயர்ப்பு ராமவர்ம கவிராஜன் என்பாரால் உரைநடை யாக எழுதப்பட்டு 1595 - ஆம் ஆண்டுக்குச் சமமான கொல்லம் ஆண்டு 770 - இல் வெளியிடப்பெற்றது. ராமவர்ம கவிராஜன் என்பார் பாரம்பரியமான புலவர் அல்ல. 1565 முதல் 1601 ஆம் ஆண்டு வரை கொச்சியை ஆண்ட கேசவ ராமவர்ம மகாராஜா ஆவர் என்று உள்ளூர் பரமேசுவர அய்யர் தமது கேரள இலக் கிய வரலாற்றில் குறிப்பிடுகிறார். சிறந்த நீதி நூலாகக் கருதப் பட்டதனால் திருக்குறளைப் பற்பல புலவர்களும் கவிஞர்களும் பல்வேறு காலங்களில் மலையாளத்தில் பெயர்த்துள்ளனர். 1899- இல் கோவிந்தபிள்ளை என்பார் முழு நூலையும் மலை-யாளத்தில் தெளிவுற எழுதியுள்ளார். இன்றைக்கு முப்பது ஆண்டு களுக்கு முன்னர் வெளிவந்த திருக்குறள் மொழி பெயர்ப்பு ஒன்று பாக்களாகவே வென்னிக்குளம் கோபாலகுருப் என்பாரால் பெயர்க்கப்பட்டுள்ளது. ஈழவ குலத்தைச் சார்ந்த நாராயண குரு என்பாரும் தாம் எழுதி 1978-இல் வெளியிட்ட பாடற் தொகுதியில் திருக்குறளின் முப்பது பாக்களை மட்டும் மொழி பெயர்த்துள்ளார். திருவெள்ளா பாஸ்கரன் நாயர், பி. தாமோதரம் பிள்ளை ஆகி யோரும் குறளை மலையாளத்தில் பெயர்த்தெழுதியோர் ஆவர்.

(ii) ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரம் கேரளப் பகுதியோடு நெருங்கிய தொடர்புடைய தமிழ்க்காப்பியம் ஆகும். மலையாளப் புராணங்களில் கண்ணகியைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. வஞ்சிக் காண்டத்தில் வரும் சேரநாடு பற்றிய செய்திகளும், விளக்கங்களும் இன்றைய மலையாளப் பகுதியில் வருவனவற்றோடு ஒப்பு நோக்கத்தக்கன வாகும். நென்மாரா நாராயணன் நாயர் இக்காப்பியத்தினை 1931 - இல் உரைநடையாகப் பெயர்த்துள்ளார். இவருடைய மொழிபெயர்ப்பில் காப்பியத்தின் சிற்சிலபகுதிகள் காவடிச்சிந்து பாணியில் பாடல்களாகவும் காணப்படுகின்றன. எஸ். ரமேசன் நாயர் சிலம்பு முழுவதனையும் பாடலாகவே வெளியிட்டுள்ளார்.

இந்நூல் 1978-இல் வெளி வந்தது. இந்நூலே மூல நூலினின்று பெரிதும் வேறுபடாமல், மரபு வழுவாமல் இலக்கியச்சுவை ததும்ப பெயர்த்தெழுதப்பட்டதாகும்.

(iii) கம்பர் எழுதிய இராமகாதை மலையாளக் கவிஞர்களின் கருத்தை ஈர்த்துள்ளது. இந்தியப் பெரு நிலத்தின் பற்பல பகுதி-களிலும், ஜாவா, சுமத்ரா இந்தோனிசியா போன்ற தென்கிழக்கு ஆகிய நாடுகளிலும் பரவியுள்ள இராமாயணக் கதை கேரளத்தை-யும் ஆட்கொண்டதில் வியப்பில்லை. மலையாள மொழியின் முதற் செய்யுள் இலக்கியமாகக் கருதப்படுவது 'இராம சரிதம்' என்பதே-யாகும். சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே இது எழுதப்பட்ட தாகும். இராமகதாப்பாட்டு என்ற பெயரில் பாடல் வடிவமாகப் பெயர்க்கப்பட்டுள்ள கம்பனின் இராம காதை இராம பணிக்கர் என்பாரால் யாக்கப் பட்டதாகும். பகவதி அம்மன் கோவில்களில் விழா நடக்கும் போதும் பாவைக் கூத்தின் போதும் இப்பாடல் கள் பண்ணோடு பாடப் பெறுகின்றன. அண்மைக் காலத்தில் ஜி. ராமகிருஷ்ண பிள்ளை என்பார் கம்பராமாயணத்தை உரை-நடையாக (1954) வெளியிட்டுள்ளார்.

(iv) நாராயண பணிக்கர் பெயர்த்துள்ள பதிற்றுப்பத்து புற-நானூறு ஆகியவற்றில் பகுதிகள் 1958-இல் கொல்லத்திலிருந்து வெளியாகி உள்ளன.

(v) இடைச் சங்க காலத்தில் யாக்கப் பெற்றதாகக் கருதப்படுவது தொல்காப்பியம் எனும் இலக்கண நூல். கடல்கோளால் அழிக்-கப்பட்டவை போக, எஞ்சியுள்ள தமிழ் நூல்களுள், இதுவே மிகவும் பழைமையானதாகக் கருதப்படுவது. எம். இளையபெருமாள் ஜி. சுப்பிரமணிய பிள்ளை ஆகிய இருவரும் தொல்காப்பியத்தை மலையாள உரைநடையில் பெயர்த் தெழுதியுள்ளனர். ஆண்டு 1961.

(vi) அகநானூறு குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை நற்றிணை ஆகிய அக இலக்கியத் தொகுதிகளிலிருந்து நூறு பாடல்களைத் தேர்ந்தெடுத்து என். வி. கிருஷ்ணவாரியர் பெயர்த்-தெழுதிய நூலை கேரள சாகித்திய அகாடெமி 1981 - இல் வெளி-யிட்டுள்ளது.

(vii) கலிங்கத்துப்பரணி, தாயுமானவர், பட்டினத்தார் ஆகியோரின் பாடல்கள் ஆத்திச்சூடி, தேம்பாவணி ஆகியவற்றோடு சைவ சித்தாந்த நூலாகிய கைவல்ய நவநீதம் ஆகியனவும் பல்வேறு காலங்களில் மலையாளத்தில் பெயர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஒப்பிலக்கியம் பற்றி பரவலாகப் பேசப்படுவதோடன்றி, பல்கலைக்கழக மட்டத்தில் அது பாடநூலாகவும் வைக்கப்படுகின்ற இற்றை நாட்களில் மலையாளத்தில் பெயர்க்கப்பட்டுள்ள தமிழ் இலக்கியங்களின் அட்டவணையைத் தயாரிப்பது அரிய தொண்டாக அமையும். ஆராய்ச்சி மாணவர்களும் இந்தப்பணியினை மேற்கொண்டால், இருமொழிக்கும் ஏற்ற பயன் விளையும். பரமேச்வரன் நாயர் எழுதி சாகித்ய அகாதெமியால் வெளியிடப்பட்டுள்ள மலையாள இலக்கிய வரலாற்றில் மொழிபெயர்ப்பு எனும் கட்டுரையில் வடமொழி வங்காளம், ஆங்கிலம் ஆகியவற்றினின்று மலையாளத்தில்பெயர்க்கப்பட்டதை குறிப்பிடுகிறார். தமிழிலிருந்து பெயர்த்தெழுதப்பட்டவை பற்றி எந்தக்குறிப்பும் இல்லை.

சுப்பிரமணிய பாரதியின் கவிதைகள் ஜனரஞ்சகமான மலையாள வார மாத இதழ்களில் மொழிபெயர்க்கப்பட்டு அவ்வப்போது வெளியிடப்படுகின்றன. பொதுவுடமைக் கருத்துக்கள் மலிந்த கேரளாவில் பாரதி ரஷ்யப் புரட்சியை வாழ்த்திப் பாடிய பாடலும், மாஜினியைப் பாராட்டிய பாடலும் மொழி பெயர்க்கப்பட்டவற்றுள் தலைமையிடம் பெறத்தக்கன. கல்கி, மு. வ. அகிலன், ஜெயகாந்தன் போன்றோரின் கதைகளுள் சிறந்தவற்றை மலையாளப்பத்திரிகைகள் பெயர்த்து வெளியிடுகின்றன. தகழி சிவசங்கரபிள்ளையின் புதினங்களும், உள்ளூர், வள்ளத் தோள், சங்கரகுருப் ஆகியோரின் கவிதைகளும் தமிழில் பெயர்க்கப்படுவதை இதற்கு ஒப்பாகக் குறிப்பிடலாம்.

புதிதாகத் துவங்கப்பட்ட

# காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக முதல் துணைவேந்தர்



டாக்டர் : திருமதி இராதா தியாகராசன்

| | | |
|---|---|---|
| தலைவர் | — | தியாகராசர் கலைக்கல்லூரி, பொறிஇயற் கல்லூரி |
| தலைவர் | — | காந்தி மியூசியம், மதுரை |
| நிறுவனத் தலைவர் | — | தியாகராசர் அறக்கட்டளை, மதுரை |
| துணைத்தலைவர் | — | பாரதீய வித்யா பவன், பம்பாய் |
| தொழிலதிபர் | — | தியாகராசர் ஆலை, மதுரை<br>சரோஜா நூற்பு ஆலை, கோவை |
| நூலாசிரியர் | — | திருவாசகத்தில் அருளியல் |

# காரைக்குடியின் புதிய துணை வேந்தர்

அண்மையில் துவங்கப் பெற்ற காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் முதல் துணை வேந்தராக டாக்டர். திருமதி. இராதா தியாகராசன் அவர்கள் பதவியேற்றுள்ளார். இது அந்தப் பல்கலைக்கழக வரலாற்றுக்கே பெருமை தரும் நிகழ்ச்சி. மகளிருக்கென்றே தொடங்கிய கல்வி நிறுவனத்தில் ஒரு அம்மையாரைத் துணைவேந்தராக அமர்த்துதல் வியப்பன்று. பல்வேறு துறைகளைக் கொண்டதும், ஆடவரும் மகளிரும் ஆயிரக்கணக்கில் கல்வி பயில்வதுமாகிய ஒரு பல்கலைக்கழகத்தில் தென்னகத்திலேயே முதல் துணைவேந்தராக அமரும் பெருமை டாக்டர். இராதா தியாகராசன் அவர்களைச்சாரும்.

ஆங்கிலமும் அருந்தமிழும் கைவரப் பெற்ற இராதா அம்மையார் மலையாளத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர். மும்மொழிப் புலமை சான்ற அம்மையார் தொழிலதிபர் கருமுத்து தியாகராசன் செட்டியாரை மணந்து கொண்டார் என்று சொல்லுவதை விட தமிழையே மணந்து கொண்டார் என்பதே மிகவும பொருத்தம் ஆழ்ந்த தமிழ்ப்பற்றும், அரிய வள்ளன்மையும் கொண்ட செட்டியார் அவர்களை மணந்த பின்னரே இராதா அம்மையார் முறையாகத் தமிழ் பயின்றார். திருவனந்தபுரம் மகாராசா கல்லூரியில் பி எஸ்.சி. பட்டம் பெற்றவர் செட்டியாரை மணந்து மதுரைக்கு மணமகளாக வந்து மதுரைப் பல்கலைக்கழகத்தில் 1969 - இல் பெற்றது ஆங்கில எம்.ஏ பட்டம். பேசுதற்கும், பழகுதற்கும், எழுதுதற்கும் ஆங்கிலம கைவந்த கலையென்றாலும், அம்மையாரின் பண்பாடும் கலையும் தமிழ்தான். தொடர்ந்து இலக்கியம், இலக்கணம், சித்தாந்தம் ஆகியனவற்றை பாரம்பரியத் தமிழ்ப்புலவரிடம் முறைப்படி பயின்றார் திருவாசகத்தை ஆய்வு செய்து 1972 - ஆம் ஆண்டு டாக்டர் பட்டமும் பெற்றார். ஈழத்தைச் சார்ந்த ரத்தினாவிற்குப் பிறகு திருவாசகத்தில் ஒரு மிகச்சிறந்ததாகப் போற்றப்படுவது இவரது ஆய்வாகும் செல்வ வளத்தில் கொழிக்கும் ஒரு தொழிலதிபரின் மனைவிக்குச் சிந்தனையெல்லாம் தமிழும் சைவமும் என்பது பலகாலும் பாராட்டத்தக்க அரிய பண்பாகும்.

கைதேர்ந்த கல்வியும், பன்மொழிப்புலமையும், சைவநெறியும் கொடைத்திறமும் வாய்ந்த அம்மையார் அவர்களைத் தமிழக அரசு பழனித்திருக் கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவராகவும் தக்காராகவும் ஏழாண்டு காலம் நியமித்திருந்தது. அழகப்பா பல்கலைக்கழகத்தில் தேவையான அறிவியற் கலைகளுக்கு முதலிடம் கொடுப்பேன் என்று துணைவேந்தராகப் பதவியேற்ற அன்றே வாக்குறுதி கொடுத்தார்கள். கலைகளுக்கும், அறிவியலுக்கும் ஒரு இணைப்புப்பாலமாக இருப்பதோடு அம்மையாரின் திட்டமிட்டுப் பணிபுரியும் தீர்க்கதரிசனத்திற்கும் அது ஒருஎடுத்துக்காட்டு.

அம்மையாரின் உளம் அறிந்து நடக்கும் அவர்களது ஒரே செல்வன் கருமுத்து கண்ணன் அவர்கள் இளைய தலைமுறைக்கு ஒரு எடுத்துக்காட்டு. வேலை நிறுத்தம் இல்லாது நூற்பாலைகளை இயக்குவது ஒரு அரிய சாதனைஅல்லவா! கோவையில் உள்ள நூற்பாலையும், கப்பலூரில் உள்ள தியாகராசர் ஆலையும் அவர்களது நிர்வாகத்தில் இயங்குபவை. மதுரையில் தியாகராசர் கல்லூரியையும், பொறிஇயல் கல்லூரியையும் நடத்தி வருவதோடு பல்வேறு கல்வி கலாச்சார நிறுவனங்களில் டாக்டர். இராதா அம்மையார் பெரும்பங்கு வகிக்கிறார்கள். நடுவண் அரசின் அனைத்திந்தியப் பெண்கள் குழுவில் தமிழக அரசு நியமித்த சிறப்பு உறுப்பினராக இருக்கிறார். கே. எம். முன்ஷியால் தொடங்கப்பட்டு உலகமெங்கணும் பரந்து கிடக்கும் பாரதீய வித்யா பவனில் உதவித்தலைவராகவும் பணியாற்றுகிறார். மதுரையின் கல்வி வளர்ச்சிக்கும் தொழில் அபிவிருத்திக்கும் ஆதாரமாக விளங்கிய தமது அருமைக் கணவர் கருமுத்து. தியாகராசச் செட்டியார் அவர்கள் பெயரால் அறக்கட்டளை நிறுவி அதன் தலைவராகவும் செயற்படுகிறார். அறங்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும் சான்ற அம்மையார் முதல் பெண் துணைவேந்தராகப பணியாற்றும் காலத்திலேயே அழகப்பா பல்கலைக்கழகம் பீடுநடை போட்டு பல்கிப் பெருகி வளரும் என்பது உறுதி.

— பொறுப்பாசிரியர்.

ஒ.கி கணேஷ் ஷியாம்பாபு
செந்தமிழ்க்கல்லூரி
எம்.ஏ. முதலாமாண்டு.

# கரிம வாயுக்கலன்
(Bio-gas plant)

## முன்னுரை :-

'சக்தி' (energy) பெறுவதற்கு, சூரிய வெளிச்சம், நீர், காற்று, உயிரியல்சக்தி (Bio-energy) போன்ற பலவகையான மூலங்கள் உள்ளன. இந்த சக்திகளுக்கெல்லாம் பிறப்பிடமாக விளங்குவது "சூரியனே". அவ்வகையில் சூரிய ஒளியின் துணை-யுடன் கழிவுப்பொருட்கள் பயன் அளிக்கக் கூடிய நுண்ணுயிரி களின் உதவியினால் (Beneficial Bacteria) கரிம வாயுக்கலன் அமைப்பில் (Bio-gas plant)எரிவாயு போன்ற பயன்மிக்கனவற்றைத் தருகிறது. இவ்வாயுக்கலனின் வடிவங்களையும் அதில்வாயு உரு வாகும் முறையினையும், அதற்குத் தேவையான மூலப்பொருட்-களையும், அந்த வாயுவினால் சமூகத்திற்கு ஏற்படும் பலவகையான நன்மைகளைப் பற்றியும் அறிந்து கொள்வது பயன் உடையதாக இருக்கும்.

## கரிமவாயு:-

கரிமவாயுவை உருவாக்க பல வகையான கழிவுப்பொருட்கள் பயன்படுத்தப்படும் போதிலும், இந்தியா போன்ற விவசாயத்-தை அடிப்படையாகக் கொண்ட நாடுகளில் கால்நடை மிகுந்-திருப்பதன் காரணமாக 'சாணமே' முக்கியமான மூலப்பொருட்-களாகக் கொள்ளப் படுவதால் இவ்வாயு 'சாணஎரிவாயு' என்று அழைக்கப்படுகிறது.

கரிமவாயு என்பது பலவகையான வாயுக்களின் கலவை-யாகும். இதில் மீத்தேன் (55%-65%), கரியமிலவாயு (38%-43%) போன்ற வாயுக்களும் நைட்ரஜன், ஹைட்ரஜன் சல்பைடு போன்ற வாயுக்களும் சிறிய அளவில் காணப்படும். இவ்வாயுவை உருவாக்க, அந்த அந்த இடங்களில் கிடைக்கும் கழிவுப்பொருட்-கள் அதாவது, மாட்டுச்சாணம் (Cow dung) மனிதருடைய கழிவுப்

பொருட்கள் (Night soil) பன்றியின் சாணம் (Pig-dung) கோழி முதலிய பறவைகளின் எச்சங்கள் (Poultry droppings) விவசாயப் பண்ணைக் கழிவுப் பொருட்கள் (Agricultural waste) போன்றவை பயன்படுத்தப் படுகின்றன.

இக்கழிவுப் பொருட்கள் வாயுவாக மாற்றப்பெற்றதைத் தவிர்த்து எஞ்சியுள்ள பொருட்கள் சிறந்த உரமாக வெளிவரு-கிறது. எனவே, எரிபொருள் பற்றாக் குறையையும், உரக்கட்டுப்-பாட்டையும் ஒருங்கே நிவர்த்தி செய்வதால் இவ்வமைப்பு மிக-மிக இன்றியமையாத ஒன்று என்பதை நாம் அறியலாம்.

வாயுக்கலன் (PLANT):-

வாயுக்கலன் இரண்டு வகைப்படும்.

ஒன்று மிதக்கும் வாயுக் கொள்கலன் (FLOATING DRUM) மற்றொன்று நிலையான வாயுக்கொள்கலன் (fixed Dome). சீனநாட்டில் இடப்பற்றாக் குறையின் காரணமாக நிலத்தின் அடியில் தொழிலாளர்களைக் கொண்டு நிலைவாயுக் கொள்-கலன்கள் அமைக்கப்படுகின்றன. இந்திய நாட்டில் மிதக்கும் கொள்கலனே பலவகையில் உகந்ததாக உள்ளது என்று அறிஞர்-கள் தெரிவிக்கின்றனர். எனவே, நம் நாட்டில் மிதக்கும் கொள்-கலனே பயன்படுத்தப்படுகிறது.

இக் கொள்கலனில் வெடிக்கும் அபாயம் இல்லை என்பதும் வீட்டிற்கு அருகிலேயே இயந்திரத்தை நிறுவுவதற்கு தடை இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமுதாய வாயுக்கலன் (COMMUNITY PLANT)

வாயுக்கலன் தனித்தனி குடும்பங்களுக்கு, பண்ணைகளுக்குப் பயன்படுத்துவதைப்போல, ஒரு குக்கிராமத்திற்கும் குடியிருப்புப்-பகுதிகளுக்கும் ஏன்? ஒரு சமூகத்திற்கும் மொத்தமாக பயன்-படுத்தலாம். அவ்வாறு பயன்படுத்தப்படும் நிலையில் அது சமு-தாய வாயுக்கலன் (Community Bio gas Plant) என்று அழைக்கப்-படும்.

இன்று, இவ்வமைப்பு, கருதயகவுண்டன்பட்டி என்ற சிற்றூரில் காந்திகிராமத்தின் (மதுரை மாவட்டம்) வாயிலாக அமைக்கப்பெற்று அந்தக் கிராமம் முழுவதற்கும் அடுப்புக்கள் எரிக்கும் நிலையில் வாயு பெறப்படுகின்றது.

செயல்முறை.-

சாணத்தையும், கால்நடைகளின் மூத்திரத்தையும் சேகரித்து அவற்றை தொட்டியில் நிரப்பி, தண்ணீர் கலந்து வாயுக் கொள்கலனில் உள்ள உள்ளே செலுத்தும் வழியில் (Inlet) செலுத்த வேண்டும். இவ்வாறு சென்றவை ஜீரணிப்பானில் (Digester) சென்று அடையும்.

அங்கு அக்கலவை நன்றாக கொதிப்படைந்து (Fermentation) வாயுவாக வெளிவருகிறது. வெளிவந்தவைபோக எஞ்சிய கழிவுப்பொருட்கள் வெளியேற்றும் குழாயின் (out let) வழியாக வெளியேறுகின்றது.

கொதிப்படைந்து வாயுவாக வெளியேவர அக்கலவை குறிப்பிட்ட நாட்கள் ஜீரணிப்பானில் தங்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| மாட்டுச்சாணம் | — 50 | நாட்கள் |
| மனிதனின் கழிவுப் பொருட்கள் | — 30 | ,, ,, |
| பன்றியின் சாணம் | — 20 | ,, ,, |
| கோழி முதலிய பறவைகளின் எச்சம் | — 20 | ,, ,, |

புதிதாக வாயுக் கொள்கலன் அமைத்த நிலையில் (Initial stage) குறைந்தபட்சம் மேற்கூறிய நாட்களாகும். அடுத்தடுத்து நாள் தோறும் குறிப்பிட்ட அளவு சாணக்கரைசலை உள்ளே செலுத்தி வாயுவை உற்பத்தி செய்யலாம்.

வாயுவாக வெளிவந்தவை தவிர, மற்றைய பொருட்கள் உட்செலுத்தப்பட்ட அளவிற்கு சமமான அளவாக வெளியேவரும். அது பக்குவமாகி, உரமாக பயன் படுத்தப்படுகிறது.

இவ்வினைகள் நிகழ்வதற்குத் தேவையான வெப்பநிலை, 25°c முதல் 37°c வரையாகும். குளிர்காலத்தில் இந்த நிகழ்வு குறைவாகவும், கோடைகாலத்தில் அதிகமாயும் இருக்கும். இவ்-வினைகள் நிகழ, அமிலத்தன்மை (Acidity) மிகமிக இன்றியமை யாததாகும். இது கழிவுப் பொருட்களில் உள்ள அமிலத்தை உருவாக்கும் நுண்ணுயிரிகளின் வாயிலாகப் பெறப்படுகிறது. அமிலத்தன்மை சமநிலையில் தான் இருக்கவேண்டும். இந்த சம-நிலை அமிலத்தன்மையில் தான் வாயுவினை உருவாக்கும் நுண் ணுயிரிகள் மிகவும் செயல்திறம் கொண்டதாக இருக்கும்.

பராமரிப்பு (Maintenance) :

1) வாயுக்கலனில் கழிவுப்பொருட்களின் கலவை செலுத்-தப்படுவதற்கு முன் குறிப்பிட்ட அளவு தண்ணீருடன் கலக்கப்பட வேண்டும்.

2) வாயுக் கொள்கலனின் மேற்புறத்தை ஆண்டுக்கு ஒரு முறையோ, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையோ வர்ணம் பூச வேண்டும்.

3) ஜீரணிப்பான் (Digester) என்று சொல்லப்படும் கொதிக்க வைக்கும் கொட்டி, செங்கல் சிமெண்ட் கலவை, ஃ பெர்ரோ சிமெண்ட் ஆகியவற்றால் கட்டப்படவேண்டும்.

4) வாயு இயந்திரத்தை நிர்மாணிக்கவும், வெளியே வரும் கழிவை நிரப்புவதற்கும் குழிகள் வெட்ட போதுமான இடம் வேண்டும்.

பயன்கள் :- (USES)

கரிம வாயு இயந்திரத்தின் இரண்டு பிரதான உற்பத்திப் பொருட்களாவன:

1) எரிபொருளாக வாயு 2) உரம்

இவ்வாயுவைப் பயன்படுத்துவதினால் அதிகஅளவு வெப்ப சக்தி கிடைக்கின்றது. எனவே இவ்வாயுவை பொருள்களைச்

சூடாக்கவோ, விளக்குகளை எரிக்கவோ, அல்லது இயந்திரங்களை இயக்கவோ பயன்படுத்தலாம்.

சாணவாயு எரிவாயு உற்பத்தியினால் சமூகத்திற்கு ஏற்படும் இன்றியமையாத பயன், கழிவுப் பொருட்களின் நீக்கமே. இவற்றின் நீக்கத்தால் சுற்றுப்புறம் நோய்கள் பரவாமல் பாதுகாக்கப்படுகிறது.

வெளியே வரும் கழிவுப் பொருட்களில் நைட்ரஜன் காளான் சத்துக்கள் நிறைந்திருக்கின்றன. பாசன நீருடன் இவ்உரத்தைப் பயன்படுத்த முடியாவிட்டால், கம்போஸ்ட் உரத்தை வெகுவேகமாக மக்க வைக்கப் பயன்படுத்தலாம்.

சாணத்தை இவ்வாயுக்கலனில் செலுத்துவதன் மூலம் எரிபொருளும், உரமும் ஒருங்கே உடைக்கின்றன. மேலும் எருவாட்டியின் வெப்பசக்தியைவிட (11%) இவ்வாயுவின் வெப்பசக்தி (60%) அதிகமாக உள்ளது.

மேற்கூறிய பயன்களினாலும், இவ்வமைப்பை நிருவ ஆரம்பநிலையில் சிறிது முதலீடு செய்தாலும் இவ்வமைப்பினால் கிடைக்கும் பொருளாதாரம் சிறப்பாக உள்ளது.

அகில இந்திய கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு

(Khadi and Village Industries Commission) KVIC-ன்பங்கு:-

கரிம வாயுக்கலன் (Bio-gas plant) அமைப்பதில் அகில இந்திய கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்தியா முழுவதிலும் உள்ள கிராமங்களில் கோடிக்கணக்கான வாயுக்கலன்களை அமைக்க இவ்வாணைக்குழு பணத்தை அளித்து உதவிசெய்கிறது. மேலும் தேசீய வங்கிகளும் குறிப்பிட்ட அளவுத் தொகையை அளிக்கின்றது.

KVIC நிறுவனம் இதைத்தவிர மேலும், கரிம வாயுக் கலன்கள் பற்றிய அமைப்பில் புதிய முறைகளைப் புகுத்த தொடர்ந்து ஆய்வுகள் பல நடத்தி வருகின்றது.

முடிவுரை :

வீண்விரயமாகும் பொருள்கள் செல்வமாக மாறுகின்றன. (wealth from waste) மேலும் சேறாகும் கழிவுப் பொருட்கள் உடல் நலம் காப்பவையாக மாறுகின்றன. உடல் நலம் காக்கும் உன்னத உரங்களாக (Health too from waste) மாறுகின்றன.

இது ஒரு அருமையான அறிவியியல் கண்டுபிடிப்பாயினும், ஊர்ப்புறங்களிலுள்ள எளிதில் விளங்கக் கூடிய அறிவாக இருக்கின்றது. இந்த வாயுக்கலன் அமைப்பை ஏற்படுத்தி பராமரிப்பதில் சற்றும் சிக்கலோ, தொல்லையோ கிடையாது. நாடு முழுவதிலும் இந்திய அரசு, இத்தகைய அமைப்பைப் பரப்ப வேண்டுமென்பதற்காக பெருமளவில் மான்யமும், உதவித்தொகையும் வானொலி மூலம் விளம்பரமும், பட்டிமன்றங்கள் கருத்தரங்குகள் மூலமாகவும் இதுபற்றிய மேலும் நுண்ணிய கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைப்பதிலிருந்து இவ்வமைப்பின் முக்கியத்துவம் விளங்குகிறது.

# பாரதிதாசன் - ஒரு மதிப்பீடு

— பழனி - அரங்கசாமி

(சென்ற இதழ்த்தொடர்ச்சி)

பாவேந்தரது உவமை நலன்கள் இயற்கையோடு இயைந்-தன. எளிதில் புரிந்து கொள்ளத் தகுவன. இலக்கிய நயம் வாய்ந்தன. சிற்சில உவமைச் சொற்றொடர்கள் சங்க கால இடைக் கால இலக்கியங்களின் சால்புகளைக் காட்டுவனவாய் அமைந்துள்ளன. பாண்டியன் பரிசு என்னும் காப்பியத்தில் வருகிற முக்கியமான பெண் பாத்திரம் அன்னம். அவள் துயிலுகின்ற காட்சியினைக் கவிஞர் வருணிக்கிறார். துயில்கின்ற நிலையில் யாரையும் பார்ப்பது விரும்பத் தகுந்தது அல்ல. பலர் வாயைப் பிளந்த படியே தூங்குவர். மூக்கினாலோ, வாயினாலோ மூச்சு விட்டுச் சற்று கரட முரடான ஒலியை எழுப்பி பிறரை உறங்க விடாது தாம் மட்டும் உறங்குவர் சிலர். ஆனால் அன்னம், எனும் அழகிய பெண்மகள் உறங்குவதைக் கவிஞர் பேசுமாறு காணுங்கள்,

'கைம் மலரில் தலைசாய்த்துப் புன்சிரிப்பைக்
கனி இதழில் புதைத்துடலை ஒருக்கணித்துக்
கைவல்லான் வைத்த யாழ்போற் கிடந்தாள் :

இராம காதை தந்த கம்பன் காடு நோக்கிச் சென்ற சீதா ராமனைப் பார்த்து 'அல்லையாண்டமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச' என்று கூறுவதில் நயம் காணுவது உண்டு. பெண்மகள் உறங்குவதைப் பற்றிப் பேச விரும்பாத கம்பன் அவனைக் குறித்த விளக்கம் தந்து விட்டு, சீதை பற்றி வரும்-போது அவளும் என்று மட்டும் சொன்னான். பெண் துயில் வதை ஆண் மகன் பார்க்கக் கூடாது என்னும் மரபினைக் கம்பன் இலக்கியத்தில் போற்றுகிறான் என்பர் பௌராணிகர். அப்படி ஒரு நியதியினை உண்டுபண்ணி அதற்குக் கட்டுப் படாமல் அன்னம் எனும் அழகிய பெண்மகள் உறங்குவதைக் காட்டினார் பாவேந்தர்.

மாறுவேடத்தில் சென்ற ஆத்தாக்கிழவி அவள் கணவன்து காலை வெட்ட, அவனோ அவளது கையை வெட்ட இருவரும் இரத்த வெள்ளத்தில் கிடக்கும் காட்சியை

'செந்நீர் புரளுகின்ற இரண்டுடம்பும்
தெண்ணீரின் கரை மீனாய்த் துடிக்கும்' என்பார்.

தமிழ் நாட்டில் சினிமா என்னும் தலைப்பில் முதற்கவிதைத் தொகுப்பில் ஒரு பாடல் உள்ளது. அதில் வருகின்ற

தெளிபுனலில் தாமரை மேற் காற்றடித்த போது
சிதறுகின்ற இதழ் போலே செவ்விதழ் துடித்து

என்பது மிகச்சிறந்த உவமை. சிவந்த உதடுகளின் துடிப்பிற்குக் காற்றிலே பட படவென்று துடிக்கும் தாமரை மலரின் மெல்லிய செவ்விதழ்கள் ஒப்புமை செய்யப்படுகின்ற நயம் பாராட்டத்-தகுந்தது.

கவிஞனுக்குப் பரந்து பட்ட சொல் வளம் தேவை. ஆயினும் அவற்றை வீணாக விரயம் செய்யாது தேவைக்கு ஏற்றவாறு சிக்கனமாகப் பயன்படுத்துவதிலே தான் அவன் எழுதுகின்ற கவிதைக்குச் சிறப்பு. எண்ணற்ற இலக்கிய வழக்காற்றுச் சொற்கள் அவனது கருத்தோட்டத்திற்குத் தகுந்தவாறு உருவாகின்ற கவிதைக்குள் புகுந்து வரவேண்டும். ஆழ்ந்த சிந்தனையும், வேண்டிய சொல் வளமும் இருக்கும்போது கூட சிற்சில கவிஞர்கள் தாம் அடைகின்ற உணர்ச்சிப் பெருக்கை ஈடுகொடுக்கத் தக்க சொற்கள் மொழியில் இல்லாத போது புதிய சொற்களைப் படைத்து விடுகின்றனர். இலக்கிய உலகமும் அதனை ஏற்றுக் கொள்கிறது. இந்த நியதி அனைத்து மொழிக் கவிஞர்களுக்கும் ஒக்கும். ஆங்கில மொழியில் கீட்ஸ் என்னும் இளங்கவிஞன் உணர்ச்சிப் பெருக்கத்தில் தனது கவிதைகளில் இலக்கண வரம்பை மீறிச் சிற்சில சொற்களைப் படைத்துள்ளதே இதற்குச்சான்று. பாவேந்தாது கவிதைகளை ஆழ்ந்து பயிலும் போது அவருக்கிருந்த சொல் வளத்தின் ஆழமும் அகலமும் நமக்குத் தெரிகின்றது. புதிய சொல் படைக்க வேண்டும் ஏன்கின்ற சொற் பஞ்சம் அவருக்கு இல்லை. அவர் சார்ந்த

தமிழ் மொழியிலும் அப்படியொரு தேவை இல்லை. அறிவியற் சொற்களுக்கு வேண்டுமானால் பஞ்சம் இருக்கலாம். ஆனால் இலக்கியச் சொல் வளம் வறண்டு போக வில்லை.

கற்று வல்ல தமிழ்ப் பெரியோரிடம் தமிழ் இலக்கியம் பயின்ற தோடன்றி கவிஞர் கல்லூரியிலும் முறைப்படி பயின்-றுள்ளவர். எனவே இலக்கியச் சொற்களேயன்றி கிராமிய, வழக்-காற்றுச் சொற்களையும் தங்கு தடையின்றிக் கவிஞர் பயன் படுத்தியுள்ளார். எனவே தான் பாவேந்தரின் கவிதைகளில் சொல்லோட்டம் குதி போடுகிறது. பட்டுடை தரித்த இளம் பெண் கொத்து மலர்க் குழலியாய் நடந்து போகின்ற காட்சியைப் பாருங்கள்.

பொன்னிழையால் பூப்போட்ட நீலப்பட்டுப்
புடவையொடு நடையழகி கண்டேன் ஆங்கோர்
புன்னைமர மலர் குலுங்க நடந்ததென்ன
புதுமையென நான் வியந்தேன்

சிந்துக் கவியும் சந்தக் கவியும் பாவேந்தரது சொந்தக் கவிகள் எனலாம். விரகதாபம் என்னும் கவிதையில்

'காதலும் கனலாய்ச்சுடும் இதென்ன மாயமோ'

என்று கேட்டு விட்டு

நலியுதே என் அகமிகுதியும் மலருடலே
நனிமெலிதல் அநீதி இதுவலவோ
வனிதையாளி எனதிர் அழகுதுரை விரைவில்
வருவரரோ அல்லது வருகிலரோ

என்றும் பாடுவார்.

கிராமியச் சொற்களும், நாட்டுப்புற மொழிகளும் புரட்சிக் கவிஞரின் இலக்கியப் படைப்பில் ஏற்றம் பெற்று நிற்கின்றன. வீரத்தாய் என்னும் நாடகத்தில்

(i) 'என்னா கிழவா! பொடியனெங்கே இங்கே வா!
கன்னா பின்னா என்று கத்துறியே என்னாது?

(ii) கற்கண்டு என்ற நாடகத்தில் அதே பெயருடைய ஏழைக் குடும்பத்து இளநங்கை தருமன் எனும் இளைஞனிடம் காதல் வயப்படுகிறாள். இருவரும் மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொள்ளுகிறார்கள். அவனோ அவளை

செவ்வாழைப் பழச் சீப்பே!
சீமை எலந்தத் தோப்பே — என்கிறான்

அவளோ அவனோடு இனையப்போகும் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறாள்.

'நஞ்ச பெலாச் சொளே நாக்லே வந்து குதிச்சாப்லே

---

கொடலை மல்லிப்பூ கொட்டி முடிச்சாப்லே
வடம்புடிச்ச தேரு வாசல்ல வந்தாப்லே.

மானுட இனத்துக்கே பொதுப்படையான அன்பு, அருள், பண்பு, பாசம், நகை, பொறை, சினம் போன்ற மனித இயல்புகளை. விதந்து கூறும்போது நாடு மொழி மதம் இனம் என்ற கட்டுப்பாடுகளைக் கவிஞர்கள் கடந்து விடுகிறார்கள். ஒருமைப்பாடுள்ள இந்தப் புலமை உள்ளங்கள் மொழியினாலும், கலாச்சாரத்தினாலும், காலத்தினாலும்) வேறுபட்டாலும் கருத்தினாலே ஒன்றுபட்டு விடுகிறார்கள். ஒப்பிலக்கிய வாதிகள் இதனை இணைவரை ஆய்வு (Parallel study) என்று கூறுவர். இந்த நோக்கோடு பாவேந்தரின் கவிதைகளை நுணுகிப் பார்த்தால் உலகப் புகழ் பெற்ற நாடகக் கவிஞன் ஷேக்ஸ்பியரோடு அவர் இணைந்து போகின்ற இடங்கள் ஆங்காங்கே தட்டுப்படுகின்றன.

இதோ ஒரு பெண் குழந்தை பள்ளிக்குச் செல்ல வேண்டும் குளிப்பித்து, உடை அணிவித்து பூச்சூட்டி அந்தக் குழந்தையை ஆயத்தப்படுத்துகிறாள் தாய். குழந்தைக்கோ பள்ளிக்குச் செல்ல விருப்பம் இல்லை. வெளியிலும், வீட்டிலும் ஓடியாடி விளையாடிய அச்சிறு குழந்தை பள்ளியில் சென்று சிறைபட்டிருக்க விரும்பவில்லை. நின்று கொண்டே அழுகிறது. பெற்றதாய் உற்ற வார்த்தைகளைச் செல்லி உற்சாகப்படுத்துகிறாள்.

தலைவாரிப் பூச்சூட்டி உன்னைப் பாட
சாலைக்குப் போ என்று சொன்னாள் உன் அன்னை

சிலைபோல ஏனங்கு நீ நின்றாய் - என்றும்
சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய் ?

தமிழகத்துக் குழந்தை தான் பள்ளிக்குச் செல்லத் தயங்குகிறது என்பது இல்லை. நானூறு ஆண்டுகளுக்கு முன் ஆங்கில நாட்டுக் குழந்தையும் அப்படித்தான் இருந்தது போலும். தோற்பை ஒன்றை தோளிலே போட்டுக் கொண்டு ஒரு அழகான பையன் விருப்ப-மில்லாமல் நத்தைமாதிரி நகர்ந்து போகிறான்-என்பார் ஷேக்ஸ் பியர் (Seven Ages of man - As you like It). பள்ளிப் பாடம் வேம் பாய்க்கசக்கின்ற உண்மைக்கு எந்த நாட்டுக் குழந்தையும் விதி விலக்கில்லை என்பது தெரிகிறது.

வாழ்க்கையில் ஒருவனது உயர்வும் தாழ்வும் அவன் தலை யெழுத்துப்படியே நடக்கும் என்று கூறுகிறோம். அந்தத்தலை விதியை ஊழ் என்று சொன்னால், அதனையும் கூட ஒருவன் தனது இடையறா முயற்சியினாலே வென்று விடலாம் என்பார் வள்ளுவர். தலையெழுத்து என்று எண்ணிக் கொண்டே உனது தன்னம்பிக்கை, முயற்சி ஆகியவற்றைக் கைவிட்டு விடாதே என்ற கருத்தைச் சற்றுக் கடுமையாகவே வற்புறுத்துகிறார். பாவேந்தர்.

மிதிபட்டுச் சாவதற்கும் மேம்பட்டு வாழ்வதற்கும்
காரணந்தான்
மதி அல்ல; தலைஎழுத்தே! என்பவனை ஒரு தமிழன்
மதிக்கலாமா?

என்பதே அப்பகுதி. 'நாளும் கோளும் தான் அந்நிலைக்குக் காரணம் என்று எண்ணாதே புருட்டஸ்; நாம் அடிமைகளைப் போன்றிருப்பது நமது குற்றம் தான்; எனவே கட்டுப்பட்டிருக்கும் நிலையை உடைத்தெறிய வேண்டும் என்ற கருத்துப்பட ஜூலி யஸ் சீசர் என்னும் நாடகத்தில் காஷியஸ் பேசுவதை ஒத்துப் பார்க்கலாம்.

The fault dear Brutus is not is our stars
But in ourselves that we are underlinks

பற்பல இடங்களில் பாவேந்தரது நீண்ட கவிதைகளின் இடையிடையே பல்வேறு தமிழ் இலக்கியக் கருத்துக்களின் எதிரொலியைக் காணமுடிகிறது. பாண்டியன் பரிசில் வருகின்ற ஆத்தாக்கிழவியின் கணவன் வீரப்பன் கூறுகிறான்.

'இல்லாரும் அங்கில்லை; பிறன் நலத்தை
எனதென்று தனியொருவன் சொல்லான் அங்கே'

எனும் பகுதி 'வண்மையில்லை ஓர் வறுமையின்மையால்' என்ற கம்பன் கூற்றை நினைவூட்டுகிறது. பிணத்தின் அழகற்ற நிலையைக் கண்ட வேலன் உடலின் பல்வேறு உறுப்புகளை இழித்தும் பழித்தும் பேசுகிறான். அவற்றை மிக உயர்ந்த பொருள்களோடு ஒப்புமைப்படுத்துகின்ற புலவர்களிடத்தும் குறை காணுகிறான்.

பேன் நாறி வீழ்குழலைத் தேனாறு என்றும்
பீளையொழுகும் விழியை நீலமென்றும்
மேல் நாறும் சளி மூக்கை எட்பூ என்றும்
வெறுங்குறும்பிக் காதை எழில் வள்ளை என்றும்
ஊன் நாறும் ஊத்தைப் பல்வாய் உதட்டை
ஒளிமுல்லை செவ்வாம்பல் கோவையென்றும்
தோல் நாறும் கன்னம் கண்ணாடி என்றும்

என வரும் பகுதி பட்டினத்தார் பாடலை நினைவூட்டுகிறது.

கற்றறிந்தார்க்கும், அறிஞர்க்கும் கவிதை விருந்து படைத்த பாவேந்தர் சமுதாயத்தின் மழலைப்பிஞ்சுகளையும் மாணவச் சிறார்களையும் மறக்கவில்லை. இளைஞர் இலக்கியம் என்ற தலைப்பில் கவிதை நூல் ஒன்றை வெளியிட்டதன் நோக்கம் அவரே கூறுகிறார்.

(i) பிழைச் சொல்லின்றி மாணவர் பாட்டுக்களைக் கற்க வேண்டும்.

(ii) உரைநடையால் ஒரு பொருளை விளக்குவதிலும் பாட்டாற் காட்டுங்கால் இனிது பதியும். இந்த இரண்டு நோக்கங்களோடு எழுதப்பட்ட இளைஞர் இலக்கியம் சொற்சுருக்கம்,

பொருள் தெளிவு, எளிமை, இனிமை மனனம் செய்வதற்கேற்ற சொல்லடுக்கு ஆகியவற்றைப் பெற்றுள்ளன. கோடை பற்றிய கவிதையின் ஒரு பகுதி.

கட்டிலறையும் ரொட்டி அடுப்பே
கழற்றி எறிந்தார் உடுத்த உடுப்பே
குட்டை வறண்டது தொட்டது சுட்டது
கோடை மிகவும் கெட்டது கெட்டது-

காப்பியம், நாடகம், கவிதை, அங்கதப்பாடல், உருவகக்கதைப் பாடல், தன்னுணர்ச்சிப்பாடல் ஆகியவற்றை சிந்து, வெண்பா, ஆசிரியப்பா, நாடோடிப்பாடல் போன்ற பாவகைகளில் மொழிப் பிரச்னை, நாடு, விடுதலை, இனஒற்றுமை, இயற்கை விளக்கம் மக்கள் வாழ்க்கைபோன்ற அனைத்துத்துறைகளிலும் ஐம்பதாண்டு களுக்கு மேலாகக் கவிதை புனைந்த பாவேந்தரை ஒரு நிறை வான முத்தமிழ்க் கவிஞர் என்றே கூறலாம். கருத்தோட்டத்தால் எளிமையான நடையினால், எற்றமிகு சொல்வளத்தினால், பாரதி யின் அடிச்சுவட்டைப் பின்பற்றினாலும் பல்வேறு கோணங்களில் பாவேந்தரின் தனித்தன்மையைப் பார்க்க முடிகிறது. பாரதியின் தாசனாக இருந்தாலும், கவிதையினை ஆக்கும் யாப்பு முறை-களைக் கையாளுவதில் பாரதி-முன்னோடிக் காட்டிச்சென்ற வசன கவிதை பாரதிதாசனை ஓரிடத்திலே கூட ஆட்கொள்ளவில்லை என்பது சிந்திக்கத்தக்கது. கட்டளைக்கலித்துறை, சிந்து, வெண்பா ஆகியவற்றோடு தாளமறுத்துப் பாடக்கூடிய பல்வேறு இசைப் பாடல்களையும் பாவேந்தர் இயற்றினார் என்பதை எண்ணும் போது பாவினங்களைக் கையாளுவதில் பாரதியாரையும் ஒரு வகை யில் இவர் விஞ்சுகிறார் என்றே கொள்ளலாம்.

பாவேந்தரின் பாடல்களில் தன்னை மறந்து படித்துச் சுவைத்த செக்நாட்டுத் தமிழறிஞர் கமில் சுவலபில் செக்மொழி யில் பாவேந்தரின் கவிதைகள் சிலவற்றைப் பெயர்த்துள்ளார். புரட்சிக் கவிஞரது பிசிராந்தையார் நாடகத்துக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசு கொடுத்துப் பாராட்டிய சாகித்ய அகாடெமி தேர்ந்தெடுக்கப் பட்ட சிற்சில பாடல்களையாவது பிற இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் பெயர்க்க வேண்டும்.

நூல்: பக்கீர்மோகன் சேனாபதி
(மொழி பெயர்ப்பு)
ஆசிரியர் : மாயதர் மான்சின்கா
வெளியீடு : சாகித்ய அகாடெமி - டில்லி - 1
தமிழ்ப் பெயர்பு: கே.சி. கமலையா
விலை : ரூபாய் நான்கு

பதினெட்டாம் நூற்றாண்டின் இடைக்காலத்தே, ஒரிய இலக்கியத்தின் வளர்ச்சிக்கு ஒல்லும் வகையான் ஒவாது பணி புரிந்து, அரும் புகழெய்திய பெரும் பேராளர் பக்கீர்மோகன் சேனாபதி. தமது ஒன்பதாம் வயது வரை முறையான கல்வியைக் கற்க இயலவில்லை. பெற்றோரை இழந்து பாட்டியின் அரவணைப்பில் வளர்ந்த பக்கீர் மோகன் கூலியாக உழைத்து மிக்க இன்னலுக்கிடையில் ஆரம்பக்கல்வி கற்று தொடக்கப்பள்ளி ஆசிரியரானார். ஒரு சிறு அச்சுக்கூடமும் நிறுவினார். இவரது அனுபவ அறிவையும், உழைப்பின் திறமையினையும் உணர்ந்த ஆங்கிலேயே நீதிபதி ஒருவர் இவரை ஒரு சமஸ்தானத்திற்குத் திவானாக நியமிக்கிறார். சேனாபதிக்கு அப்போது வயது 28. நேர்மையும் வன்மையும் தோன்றுமாறு நிர்வாகப் பணி புரிந்த பக்கீர் மோகன் சிறந்த எழுத்தாளராகவும் விளங்கியுள்ளார். அவரெழுதிய இந்திய வரலாறு பன்னெடுங்காலம் ஒரியாவில் பாடநூலாக இருந்தது. உத்கல சாகித்தியம் எனும் மாத இதழே பக்கீர் மோகனின் எழுத்துத்திறமைக்கு ஒரு தூண்டு கோலாக அமைந்தது எனலாம். சமாண ஆட்டகுண்டா, பிராயச்சித்தம் போன்ற மிகச்சிறந்த நாவல்கள் இந்த மாதப் புத்திரிகையில் தொடர்ந்து வெளி வந்தன. இந்நூல்களின் சுருக்கம் இவ்வரலாற்று நூலில் அமைந்துள்ளது பாராட்டத்தக்கதாகும். ஒரிய மொழியின் உரைநடை வளர்ச்சிக்கு பணிப் புரிந்த பக்கீர் மோகனது வாழ்க்கை வரலாறு சாகித்ய அகாடெமியின் சார்பில் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது.

ஆயினும் மாயாதர் மான்சின்கா ஆங்கிலத்தில் எழுதிய மூல நூலின் இத் தமிழ்ப் பெயர்ப்பில் சீர் இல்லாத வாக்கிய அமைப்போடன்றி இலக்கணப் பிழைகளும், மொழி பெயர்ப்புப் பிழைகளும் மலிந்து காணப்படுகின்றன. மூலநூலின் குறைபாடேயன்றி மொழிபெயர்ப்பின் பல்வேறிடங்கள் தெளிவில்லாது இருக்கின்றன. பட்டியல் போட்டுக்காட்டினால் இக்குறிப்புரை நீண்டு விடும் என்று அஞ்சி ஒவ்வொரு வகைப் பிழைக்கும் ஒரு சான்று மட்டுமே ஈண்டு கொடுக்கப்பட்டுள்ளது.

(i) பக்கம் 82 — அழகான இளவயது வெற்றிலை விற்பவனொருவன். வெற்றிலைக்கு இளவயதா அன்றி விற்பவனுக்கா என்பதை மொழிபெயர்ப்பாளரே சிந்திப்பது நன்று.

(ii) பக்கம் - 46 - இந்நூலை எழுத மூன்று ஆண்டுகட்கும் மேலாக உழைத்தாரென்று அவரே சொல்கிறார். இத்தகைய இலக்கணப் பிழைகளுக்கும் இத்தமிழ்ப்பெயர்ப்பில் பஞ்சம் இல்லை.

(iii) பக்கம் : 5 : நல்லொழுக்கத்தினால் படிப்படியாக அவர் உச்சியைச் சென்றடைந்தார்.

77 : அவருடைய கால்கள் என்னவோ - பொதுமக்கள் உறையும் மண்ணில் உறுதியாகப் பதிந்துள்ளன.

85 : தம்முடைய தனிமையான பூங்கா விடுதியில் களத்தை விட்டகன்றார்.

உயிரற்ற இந்த வாக்கியப் பிண்டங்களுக்கு மறுபதிப்பு என்று ஏதேனும் வந்தால், அதில் புத்துயிர் கொடுக்கவேண்டும்.

(iv) பக்கம்: 38 : அவர் ஓடுவதற்கு முன்பே தற்காப்புக்காகவும், சொத்துக்களை அரண்மனையில் ஆதாவின்றித்தவிக்கும் பெண்களின் மானத்தைக் காக்கவும் மேலாளருக்கு அதிகாரம் அளித்த பிறகே மகாராஜா கட்டாக் நகருக்கு ஓடினார்'.

(v) 10, 11 ஆகிய பக்கங்களில் 'சுயசரிதம்' என்று எழுதிவிட்டு 17-ஆம் பக்கத்தில் 'தன்வரலாறு' என்று குறிப்பிடுவதனால் இரண்டும் வெவ்வேறு என்றுமொழிபெயர்ப்பாளர் கருதுகிறாரா இல்லையெனில் சீர்மை (Consistency) ஏன் பின்பற்றப்படவில்லை?

(vi) பக்கம் 59-இல் Lyrical Ballads என்னும் ஆங்கிலச்சொல் 'சந்தப்பாடல்கள்' என்று பெயர்க்கப்பட்டுள்ளது. இது தவறு. Onomatopoeic Poems தான் ஓரளவாயினும் சந்தப்பாடல்கள் என்று கொள்ளத்தகும். Lyrical Ballads என்பது தன்னுணர்ச்சிப் பாடல்கள் என்றே அண்மையில் வெளியாகியுள்ள 'மேலை இலக்கியச் சொல்லகராதி' என்னும் நூல் கருதுகிறது.

(vii) ஆசிரியப்பணி எனும் அழகிய தமிழ்ச்சொல் இருக்க 'வாத்திமைத் தொழில்' (பக்:26) என்று எழுதியதின் நோக்கம் விளங்கவில்லை.

பல்வேறுபட்ட பிழைகள் மலிந்த இத் தமிழ் மொழி பெயர்ப்பை நாடு தழுவிய இலக்கிய வளர்ச்சியை மையமாகக் கொண்ட சாகித்ய அக்காதெமி போதிய கவனமின்றி வெளியிட்டது வருந்தத்தக்கது. திருந்திய மறுபதிப்பு வெளியிடுவது தமிழ் மொழிக்குக் காலத்தாற் செயும் பெருந்தொண்டாக அமையும்.

- அசாமி

## நூல் மதிப்புரை

(12) நூலின் பெயர் : சேரி

ஆசிரியர் : உன்னவ லட்சுமீ நாராயணா

தமிழாக்கம் : மு. கு. ஜகந்நாத ராஜா

வெளியீடு : சாகித்திய அக்காதெமி, புதுதில்லி-1

விலை : ரூ. 35 பக்கங்கள் : 410

'சேரி' என்னும் இந்நூல் தெலுங்கு மொழி நாவலான 'மாலபல்லியின் சுருக்கமாகும். கோதண்டராம ரெட்டி அவர்கள் இந்நாவலை மூல நூலுக்குப் பழுது நேராவண்ணம் தெலுங்கில் சுருக்கித் தர, மு. கு ஜகந்நாத ராஜா தமிழ் மொழியில் நல்ல முறையில் மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார்.

இந்நூலாசிரியர் திரு. உன்னவ லட்சுமீ நாராயணா ஒரு வழக்கறிஞராக இருந்தவர்; ஆந்திர நாட்டின் சுதந்திரப் போராட்ட வீரர்: சீர்திருத்தவாதி. காந்தியடிகள் 1920-ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கிய பொழுது, அவ்வியக்கத்தில் பங்கு கொண்டவர்; வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டுத் திரு. தேசபக்த வெங்கடப்பய்யா போன்ற அரசியல் தலைவர்களுக்குத் துணையாக இருந்தவர்: 1921 - இல் ஓர் ஆண்டுக் கால சிறை வாசத்தில் இருந்த போது இந்த நாவலை இயற்றினார் என்று திரு. பெஜவாட கோபால ரெட்டி தமது முன்னுரையில் இவரைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

மூல நூலின் ஆசிரியர் தம சமகால வாழ்வின் சமுதாய உணர்வுகளை இந்நாவலில் நன்கு படம் பிடித்துக் காட்டியுள்-ளார். கிராம வாழ்க்கை, அதில் உள்ள சிக்கல்கள், பண்ணை-யார்களின் சுயநலம், அதிகார வர்க்கத்தின் ஆணவப் போக்கு, இளைஞர்கள் தலைமையேற்று நாட்டைச் சீர்திருத்தும் முயற்சி, வேளாண்மைத் தொழிலாளர்களின் ஒற்றுமை, சேரி வாழ் அரிசன மக்களின் துன்பங்கள், தியாகங்கள், குறிக்கோள் வாழ்விற்காகத் துன்பங்களை எதிர்கொள்ளும் ஆற்றல், தொழிலாளர் இயக்கத்-தின் தொடக்கம் முதலானவை பற்றிய கருத்துக்கள் இந்நாவலில் கதைமாந்தர்கள் மூலம் சிறப்பாகக் சித்திரிக்கப்பட்டுள்ளன.

மங்களபுரம் என்னும் கிராமத்தில் வாழ்கின்றவர்களைச் சுற்றிக்கதை செல்கிறது. ராமதாஸ், மகாலட்சுமி, லட்சுமியம்மா, ராமாநாயுடு, சங்கதாஸ், வெங்கடதாஸ், ஜோதி, அப்பாதாஸ், சௌதரய்யா, வெங்கடய்யா, கமலம்மா, மோகனராவ், பந்துலு, பவுல், பாதிரி முதலியோர் வாயிலாக மகாபாரதம் போன்ற ஓர் அறநெறிக் காவியம் நாவல் உருவத்தில் இங்கே படைக்கப்பட்-டுள்ளது. மனிதகுல மேன்மைக்குத் தியாகமும், பற்றின்மையும், ஒழுக்கமும், அன்பும் அடக்கமும், பக்தியுமே மூல காரணங்கள் என்றும், ஆடம்பர அகங்காரங்கள், செல்வச் செழிப்புகள் மூல காரணங்கள் அல்ல என்றும் இந்நாவல் தெளிவாக்குகிறது.

சௌதரய்யாவின்சுயநலம், பகைமை ஆகியன அவருக்கே அழிவைத் தேடித் தருவதையும், கமலம்மா, மோகனராவின் மோகம் தீய பயனைப் பெற்றுத் தருவதையும், ராமாநாயுடு, வெங்கடய்யா, லட்சுமியம்மாள் ஆகியோருடைய தான தருமங்-கள் அவர்களை உயர்நிலைக்கு இட்டுச் செல்வதையும் இந்-நாவல் விளக்குகிறது.

அரிசன மக்களுக்குத் தலைவனாக விளங்கும் ராமதாஸ் சிறந்த கருமயோகி: வேதாந்தி: அறநெறி வழுவாதவன், மகன் சங்கதாஸின் துர்மரணம், எல்லாச் சொத்துக்களையும் இழத்தல், சிறை செட்டில் மெண்டுகளில் மதம் மாற்றும் முயற்சிக்குள்ளாக்-கும் கட்டாயங்கள், மகள் ஜோதி, மருமகன் அப்பாதாஸ் ஆகியோரின் அகால மரணம், மனைவியின் மரணம் ஆகிய

தொடர்ந்து வரும் துன்பங்களையெல்லாம் - ஏற்று யான், எனது, என்னும் செருக்கு அகற்றி வாழ்கிறான். 'கடமையைச் செய், பயனை எதிர்பாராதே' என்று கீதையில் கண்ணன் கூறிய செம்மொழிக்கு ஏற்ப அவனது வாழ்வு செவ்விதின் அமைந்துள்ளது.

நாவலின ஒவ்வொரு பக்கத்திலும் மறுமலர்ச்சிக் கருத்துக்கள் மணம் வீசுகின்றன. ஜனநாயகத்தின் இன்றியமையாமை, பூதான இயக்கத்தின் சிறப்பு, தொழிலாளர் இயக்கத்தின் தொடக்கம், சோஷலிச சமுதாயத்தை உருவாக்கும் முயற்சி ஆகிய பற்பல செய்திகள் நாவலின் நோக்கிலும், போக்கிலும், கருத்திலும், படைப்பிலும் தென்படுகின்றன.

சேரி பேச்சு வழக்கில் அமைந்த ஓர் அரிய நாவல். ஆசிரியர் கூற்றாக வரும் பகுதிகள் இலக்கிய நடையிலும், பாத்திர உரையாடல் பகுதிகள் பேச்சு வழக்கிலும் அமைந்துள்ளன. பேச்சு வழக்கில் வழங்கும் பழமொழிகள், மரபுத் தொடர்கள், உவமைகள், வருணனைகள் நூலுக்குத் தனிப்பெருமையைச் சேர்க்கின்றன. இந்நாவல் நாடகமாக நடிக்கப் பெற்றுப் பல பெருமக்களின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளது: 1920-ஆம் ஆண்டில் காந்தியடிகள் தலைமையில் நாடு சுதந்திரம் அடைவதற்காக நடத்தப்பெற்ற ஒத்துழையாமை இயக்கச் சூழ்நிலையை நன்கு எடுத்துக்காட்டியுள்ளது.

டாக்டர் நிர்மலா மோகன்

# நூல் மதிப்புரை

நூற்பெயர் : கடலுள் செல்லும் அலைகள்

ஆசிரியர் பெயர் : பண்டித ரத்னா என்-ஏ. வேலாயுதம்

பதிப்பகம் : அன்பு நிலையம்
வடிவீஸ்வரம்
நாகர்கோவில் - 629 002
முதற்பதிப்பு 1983 - மே - 15

விலை : ரு 11.75 காசு

பண்டித ரத்னா என். ஏ வேலாயுதம் அவர்கள் பல்லாற்றலும் ஒருங்கே அமையப் பெற்ற முன்னணி எழுத்தாளர்களுள் ஒருவர். ஆங்கில எழுத்தாளர் கோல்ட்ஸ்மித்தைப் போல, அவர் தொடாத இலக்கிய வகையில்லை; அவர் தொட்டுத் துலங்காத துறையில்லை. புதினம், சிறுகதை, நாடகம், ஆராய்ச்சிக்கட்டுரை கவிதை போன்ற பல்வேறு இலக்கியப் பிரிவுகளில் தன் முத்திரையைப் பதித்தவர். அன்னாரின் கடலுள் செல்லும் அலைகள் என்ற நூல் பதினேழு கதைகளின் தொகுப்பு. அவற்றுள் இரண்டு *அம்மா! அம்மா!!*; *திருவிழிகள்* ஆகியவை — திருவனந்தபுரம் அகில இந்திய வானொலி நிலையத்தாரால் ஒலி பரப்பப்பட்டு நேயர்களை மகிழ்வித்தவை. *பரிசுச் சீட்டு* எனும் முதல் கதை பிச்சைக்காரர்களின் வாழ்வு நெறியை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது. இக்கதையில் காணப்பெறும் காதலும், கவலையும். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பாங்கும் அவலமும், வஞ்சமும் பிச்சைக்காரர்களின் உலகம் மற்றதனின்று மாறுபட்டதில்லை என்பதையே பறைசாற்றுகின்றன. கற்புடைப் பெண்ணின் உணர்ச்சிக் குவியலை நேரில்கண்டு சித்திரமாக வடித்து, முதற்பரிசு பெற வேண்டும் என்ற வெறியில், தன் அன்பு மனைவியை வேடிக்கையாக விஷப் பரீட்சைக்குஉட்படுத்தி இறுதியில் அவளையே இழக்கும் படைப்பாற்றல் மிக்க ஏழை எழுத்தாளன் ஒருவனின் சோகக் கதைதான் *எழுத்தாளனும் தியாகியே.* வட்டார நாடோடிக் கதையின் அம்சங்கள் பொருந்தி, திகிலும், அச்சமும், சஸ்பென்சும் நிறைந்து விளங்குவது *நடுக்காட்டு இசக்கி.* தவறுதலாகத் தன் கணவனின் ஆடை

யில் சிக்கிய வேறொருத்தியின் காதல் கடிதத்தால் கட்டிய கண வனின் நடத்தையைச் சந்தேகிக்கும் காரிகை கலாவைப் பற்றியது காதற் கடிதம். கற்பா, கலையா எனும் கதை கற்புநெறி வழுவி, கலையைக் களங்கப்படுத்திச் சீரழியும் சினிமா நாயகி மல்லிகா தேவியின் வாழ்க்கையைச் சித்தரிக்கிறது. நூலின் தலைப்புக் கதையாக இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள கடலுள் செல்லும் அலைகள் அண்மைக் காலத்தில் குமரி மாவட்டத்தில் நடை பெற்ற சமயச் சண்டைகளை அடிப்படையாக வைத்துத் தீட்டப் பட்டுள்ளது. இது போதனை முறையில் அமைந்த கட்டுரை(didactic essay) போன்றே தோன்றுகிறது. எனினும்,

'கடலுள்ளிருந்து எழுவதுதான் அதன்
அலைகள் ! ஒரே ஆத்மாவிலிருந்து
பிறப்பவைதான் (Sic) எல்லா மனிதர்களும்!

என்ற சீரிய ஆன்மீக, மானுட நோக்கு பெரிதும் பாராட்டத் தக்கதே.

இவ்வாறாக, இத்தொகுதியில் அடங்கிய ஏனைய கதை-களும் கரு, கண்ணோட்டம், பாத்திரப் படைப்பு ஆகியவற்றில் வேறுபட்டு மிளிர்கின்றன.

ஆசிரியர் தன் முகவுரையில் குறிப்பிடுவது போல், இக்-கதைகள் 'நரம்புகளுக்கு முறுக்கேற்றுகிற கீழ்த்தரமான' கதை-கள் அல்ல : 'பால் உணர்வு என்ற வாசனைத் திரவியம்' தெளிக்கப்பட்டவையும் அல்ல. பண்பை வளர்க்கும் நோக்கே இவற்றில் பிரதானமாகக் காணக்கிடக்கிறது. ஒவ்வொரு கதை-யின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள கதே (Goetha) ஆஸ்கார் ஒயில்டு. சுவாமி இராம தீர்த்தா, எமர்ஸன், வள்ளுவர், ஜார்ஜ் எலியட், காகா காலேல்கர் ஆகிய சான்றோரின் பொன்மொழி-கள் மிகப் பொருத்தமாகவும், சிந்தனையைக் கிளறும் வண்ண-மும் அமைந்துள்ளன. பல பத்திரிகைக் கதைகள் போல் 'ஆங்கிலச் சாயங்கள்' பூசப்படவில்லை. மொழி நடை, அதிகச் சலனமின்றிப் பாயும் சிற்றோடை போல, சொற்செறிவும், நயமான உவமைகளும், சிக்கனமான வர்ணனைகளும், மிகுந்த அழுத்தமும், வலிமையும் கொண்டு திகழ்கிறது. பொதுவாகக் கூறுமிடத்து, கடலுள் செல்லும் அலைகள் அனைவரும் படித்துப் பாராட்டிய பயன்பெற வேண்டிய கதைக் களஞ்சியம்.

— பேராசிரியர் : கண்ணப்பன்

# கடல் கடந்த கண்ணன்

(ஹரே கிருஷ்ண இயக்கம்)
— பி. ஆர். ஸ்வாமி

இந்திய மண்ணில் காலம் காலமாக வழிபட்டு வரும் கடவு-ளரில் கண்ணன் முக்கிய இடம் பெறுகிறான். காலத்தைக் கடந்த வன் இறைவன். கண்ணனோ காலத்தை மட்டுமன்றி இந்நாட்டில் பேசப்படும் பல்வேறு மொழிகளையும் இனங்களையும் கடந்து மூல காரணமாய் நிற்கும் மூர்த்தியாக விளங்குகின்றான். தமிழின் முதல் நூலெனக் கொள்ளத்தகும் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் 'மாயோன் மேய காடுறை உலகம்' என்றே கண்ணனைக் குறிப்பிடுகிறது. இலக்கியச் சிந்தனையிலும் அழியாத இடம் பெறு கின்ற ஆயர்தம் கொழுந்தை சிலப்பதிகாரம் வானளவாப் புகழ்ந்து பாராட்டுகிறது.

பெரியவனை மாயவனைப் பேருலகம் எல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண் என்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண் என்ன கண்ணே

தென்னகத்தில் இறைவனை மானசீகமாக மணந்த ஆண்டாளும், வடபுலத்தில் மீராவும் கண்ணன் புகழை உள்ளமுருக்கும் இசைப் பயனாயும் ஏழிசையாயும் கண்டார்கள். வடமொழியில் ஜயதேவர் எழுதிய கீதகோவிந்தம் அச்சுதனின் பெருமையை அழியாத இலக் கியமாக்கி விட்டது.

பச்சை மா மலைபோல் மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே

என்னும் நாலாயிரப் பிரபந்தம் எண்ணில் கோடியாண்டுகள் ஏகாந் தமாய் நிற்கும் கண்ணபிரானை வண்ணமயமாக்கி வரைந்து காட்டுகிறது. கண்ணன் புகழ்பாடும் காப்பிய மரபு இற்றை நாட் கவிதைகளிலும் ஊடுருவிநிற்பதற்குப் பாரதியேசான்று. கண்ணனை விளையாட்டுப் பிள்ளையாகவும், தோழனாகவும் சேவகனாகவும்

கண்ட பாரதியின் நீண்ட சிந்தனை அத்தோடு நிற்கவில்லை. கண்ணனைச் சக்தி வடிவமாகவும் கண்டு உலகியற் பாணியில் அவனைக் கண்ணம்மாவாக்கியும் கவிதை மழை பொழிகிறது.

இப்படி மக்கள் வழிபாட்டிற்கும் இலக்கியச் சிந்தனைக்கும் இசை மழைக்கும் கருவூலமாகிய கண்ணன்புகழை கடல் கடந்தும் நிலை நாட்டிய சாதனை வங்கத்தில் பிறந்த ஒரு மகானைச் சாரும். ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும், கனடாவிலும் ஆஸ்திரேலியாவிலும், மொழியாலும், கலாச் சாரத்தாலும், மதத்தாலும் வேறுபட்டோரைத் தன்பால் ஈர்த்த பெருமையும் அவருக்கு உண்டு. ஐரோப்பிய நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்து மண்ணகத்து இந்தியரை மதம் மாற்றிய கிறித்தவ சந்நியாசிகளைத்தான் சரித்திரம் கண்டிருக்கிறது. ஆனால் இந்நூற்றாண்டில் இங்கிருந்து அயல்நாடு போந்து கிறித்தவரைக் கிருஷ்ண பக்தராக்கிய சாதனையைச் செய்தவர் இம்மகான். இருபதாம் நூற்றாண்டின் இமாலய சாதனை என்று பாராட்டத்தகும் இந்த அரிய செயலைச் செய்தவர் அருட்திரு பக்திவேதாந்த பிரபு பாதசுவாமிகள் ஆவார். ஆசா பாசங்களை வெறுத்தொதுக்கி, விண்ணக வாழ்வை எண்ணிக் கொண்டிருக்கும் தொண்டு கிழவர்கள் இந்த மகானைக் கூடி நின்று புகழ்பாடினர் என்றால் அதில் இத்துணை வியப்பில்லை. ஆனால் இந்த ஆன்மீகப் பெருந்தகையின் அன்பில் குழைந்து அருளில் திளைத்தவர்கள் எல்லாம் இளைஞர்கள். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று திரிந்து கொண்டிருந்த ஐரோப்பிய அமெரிக்க நாட்டு இளைஞர்களை இறையுணர்வில் ஈடுபடுத்துவதே பெருஞ்சாதனை. அந்த இளைஞர்களை கட்டுக்குடுமியோடு கச்சம் அணிந்து நாமமும் இட்டுக்கொண்டு கண்ணன் புகழைத் தெருக்கள் தோறும் சென்று பாடியும் ஆடியும் மெய்ம்மறக்கச் செய்த இந்த மகானின் செயல் விந்தையிலும் விந்தையல்லவா!

கிருஷ்ண கானத்தைக் கீழை நாட்டு வங்க மண்ணிலிருந்து மேலைநாட்டில் இழையோடச் செய்த இந்த மாமனிதர் தம்முடைய அறுபத்தொன்பதாம் வயது வரை வெளிநாடு சென்றதில்லை. 1965-ஆம் ஆண்டு தான் முதன்முறையாக வெளிநாட்டுப் பயணமே மேற்கொள்ளுகிறார். அதுவும் அமெரிக்க நாட்டுக்கு.

தளர்ந்த வயதில் அயலகப் பயணத்தைத் தாங்க இயலாதென்று சிலர் ஐயப்பாடு கொண்டனர். இவரால் என்ன செய்து விட முடியும் என்று எளனம் செய்தோரும் உண்டு. ஆயினும் கண்ணனின் பெருமை சாற்றப் புறப்பட்ட இவரது உணர்ச்சி வெள்ளத்தை யாராலும் தடுக்க முடியவில்லை. அமெரிக்காவுக்குப்

புறப்படுதற்கு முன்னர் சிறிய நூல்களாக முன்றே எழுதியிருந்தார். ஒரே ஒரு சீடனுக்கு ஞானதீக்கை செய்திருந்தார். அமெரிக்க நாட்டில் அடியெடுத்து வைத்த நாள் தொட்டு, ஒரு பத்தாண்டுகளுக்குள் பன்னிரண்டுக்கு மேற்பட்ட ஆங்கில நூல்களை எழுதிக்குவித்தார். வடமொழியிலிருந்த பாகவத்தை ஆங்கிலத்தில் பெயர்த்து அழகுற அச்சிட்டு பல்வேறு பாகங்களாக வெளியிட்டுள்ளார். ஆயிரக்கணக்கான அயலகத்து இளைஞர்கட்கு ஞானதீக்கை செய்தார். பல்வேறு நாடுகளுக்கும் விமானப் பயணம் செய்து விண்ணும் மண்ணும் வியக்கக் கண்ணனின் புகழ்பாடி வந்தார்.

மரபு வழித் துறவறம் பூணும் நமது நாட்டில் காவிவேட்டியும் சட்டையும் உடுத்தி உச்சிக்குடுமி வைத்துக்கொண்டு பஜனை பாடிக் கொண்டு வந்த அமெரிக்க இளைஞர்கள் கொஞ்சகாலம் கேலியும் கிண்டலும் செய்யப்பட்டார்கள். இப்போது நிலைமை மாறிவிட்டது. பிரபுபாத சுவாமிகள் இட்ட கிருஷ்ணகான வித்து முளைத்துத் தளிர்த்து கவையும் கொம்புமாகி இன்று மண்ணுலகெங்கும் வியாபித்து நிற்கிறது. அவர் தொடங்கிய உலகக் கிருஷ்ணாய இயக்கம் (Iskcon) வட அமெரிக்க தென் அமெரிக்கநாடுகள், ஐரோப்பா, ஆஸ்திரேலியா, மத்தியகிழக்கு, ஆசியா, ஆப்பிரிக்க நாடுகள் ஆகிய அனைத்திலும் வேரூன்றி நிற்கின்றது.

தனியொரு மனிதரால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு இயக்கம் பத்தாண்டு காலத்திற்குள் பாருலகெங்கும் விரைந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதற்கு இதுவே சான்று. இப்படி உலகளாவிய புகழை ஈட்டமுடியும் என்று பிரபுபாத சுவாமிகளே எண்ணிப்பார்த்திருக்க முடியாது. எம்மதமும் சம்மதமே என்று சொன்ன வள்ளலாரும் 'கடை விரித்தேன் கொள்வாரில்லை' என்று மனம் நொந்து குறைப்பட்டாரென்று வரலாறு கூறுகிறது.

ஆனால் வங்கத்தில் பிறந்த இந்த ஆன்மீகச் சிங்கமோ சென்ற இடமெல்லாம் சிறப்பும் சீரும் பெற்று உயர்ந்தது. நசுங்கிய தகரப்பெட்டியும், அதில் நைந்து போன பாகவத நூலையும் கசங்கிய கையெழுத்துப் பிரதிகளையும் கொண்டு சென்றாலும் செல்லுமிடமெல்லாம் இவர் சேம நெறியாகக் கண்டார். ஹார்வார்டு பல்கலைக்கழகத் தத்துவபேரறிஞர் ஹார்வி காக்ஸ்

ஆயிரத்துள் ஒருவர் என்று சுவாமிகளை உளமாரப் புகழ்கிறார். இந்தியாவில் வேருன்றி உலகெங்கும் பரந்து கிடக்கும் கிருஷ்ணாய இயக்கத்தைத் தொடங்கிய பிரபுபாதர் ஒரு புதிய மதத்தைத் தொடங்கிய மகான் என்று கூடக் கூறலாம். பொருளாசையில் மூழ்கி மடிந்து கொண்டிருக்கும் இன்றைய குழப்பம் மிகுந்த உலகத்திற்கு இவரது ஆன்மீக வாழ்வு ஒரு வழிகாட்டியாக விளங்கும் தகைமையது. கண்ணன் மீது இவர் கொண்ட அளப்பரிய காதல் நிலத்தினும் பெரிது; வானினும் உயர்ந்தன்று; நீரினும் ஆரளவின்று. செல்வ வளத்தில் மூழ்கிக் கிடக்கும் அமெரிக்க நாட்டுச் சிந்தனையைக் கிருஷ்ண பக்தியாக மாற்றிய இந்த வங்கத்துப் பெரியவரின் வாழ்வும் வாக்கும் நம்மை ஆன்மீக வழி நடத்தும் என்பது உறுதி.

அருட்டிரு பிரபுபாத சுவாமிகள் கவுர் மோகன் - ரஜனி தம்பதியருக்கு 1896-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நாள் கல்கத்தாவில் பிறந்தார். கவுர் மோகன் செல்வச் செழிப்புள்ள துணி வணிகர். சொர்ண வாணிகச் செட்டி மரபைச் சார்ந்தவர். அக்கால முறைப்படி மகனது பிறந்த நாள் குறிப்பை வைத்து சோதிடம் கணிக்க அவர் ஏற்பாடு செய்தார். கணிக்கப்பட்ட சோதிடத்தை வைத்துப் பையனின் எதிர்காலத்தை உய்த்துணர்ந்த சோதிடர்கள் 'எழுபது வயதுக்கு மேல் இவன் கடல் கடந்து செல்வதோடு நூற்றெட்டுக் கோயில்களையும் கட்டுவான்' என்று கூறினார். நூற்றெட்டுக் கோவில் கட்டுதல் என்பது வங்க நாட்டுச் சொல்வழக்கு. பெற்றோர் அன்றைய நிலையில் அக்கூற்றினைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

கவுர்மோகன் தனது செல்வ மகனுக்கு ஆபே சரன் என்று பெயர் சூட்டினார். வடக்குக் கல்கத்தாவில் பெருஞ்செல்வர்கள் வாழும் ஹாரிசன் ரோடில் சொந்த இல்லமாகிய மிகப்பெரிய மூன்று மாடிக்கட்டிடத்தில் தான் ஆபே சரன் தனது இளமைக்காலத்தைக் கழித்தார். அவர்கள் மாளிகைக்கு எதிரில் ராதையும் கிருஷ்ணனும் நின்ற கோலமாக இருந்து அருள் வழங்கும் அழகிய கோவில் ஒன்று இருந்தது கவுர் மோகன் தம்பதிக்கு நெருங்கிய உறவினர்களாக இருந்த மல்லிக் குடும்பத்தினரே தமது சொந்தச் செலவில் அக்கோவிலை நிர்வகித்து வந்தனர். அன்றாடம் காலையில் நடக்கும், ராதாகிருஷ்ண வழிபாட்டில் தனது பெற்றோருடன் ஆபே சரனும் கலந்து கொண்டு பிரசாதம் வாங்கி வருவது வழக்கம். பின்னாளில்

இல்வாழ்வைத் துறந்து அவர் கிருஷ்ண பக்தராக மாறுவதற்கு இதுவும் ஒரு அடிப்படையாக அமைந்தது எனலாம்.

துணி வணிகராக இருந்த கவுர் மோகன் செல்வ வளத்தில் கொழித்தாலும், தெய்வ சிந்தனை மாறாத தூய வைணவராக இருந்தார். செக்கச் சிவந்த மேனியர். அந்தணரும் கூட மீனைச் சாப்பிடும் வங்க நாட்டில் மீன், கறி, முட்டை மட்டுமன்றி டீ, காபியும் கூட அவர் தொடுவதில்லை. கொல்லாமை, கடிந்து பேசா-திருத்தல் ஆகிய நல்லியல்புகள் இயல்பாகவே அவரிடம் அமைந்-திருந்தன. அன்றாடம் துணிக்கடையின் விற்பனை முடிந்ததும் கடையின் கூடத்தில் ஒரு பெரிய தட்டில் வெல்லமும் பொறியும் பிசைந்து போட்டு விட்டே வீட்டுக்கு வருவார். உயிருள்ள ஜீவன்-கள் பிழைத்துப் போகட்டும் என்பதோடு, பொறியைத் தின்கின்ற எலிகள் துணியைக் குதறி விடாது என்பதும் ஒரு காரணம். இரவில் காலந்தாழ்த்து வீட்டுக்கு வந்ததும் கிருஷ்ண விக்ரகத்-துக்கு எதிரில் அமர்ந்து சைதன்ய சரிதாம்ருதம், பாகவதம் போன்ற நூல்களைச் சிறிது நேரம் பாராயணம் பண்ணுவார். பின்னர் தூபதீபம் காட்டி, மணியடித்து வழிபாடு செய்வார். ஆபே சரனால் மறக்க முடியாத இளமை நினைவுகளில் இதுவும் ஒன்று. கணீரென்று அடிக்கப்படும் மணியொலி கேட்டு சிறு பையனாக இருந்த அவர் தூக்கம்கலைந்து, எழுந்து ஓடி தானும் வணங்குவதை பிற்காலத்திலும் அவர் நினைவு கூர்வது வழக்கம்.

தனது செல்வமகன் ஆபே சரனைத் தந்தையார் கவுர் மோகன் கிருஷ்ண பக்தி குறையாமல் வளர்த்தார். பகவத் நாம சங்கீர்த்தனைகளோடு இணைந்து மிருதங்கமும் வாசிப்பதற் கென்றே தனது மகனுக்கு தக்க பண்டிதரையும் நியமித்தார். அதுபோன்றே 'மகன் சரன் மீது தனது கணவனுக்குக் குறையாமல் தாயும் அன்பு செலுத்தினார், தனது குழந்தை நீண்ட நாள் வாழ இறைவனை வேண்டி ஒரு விரதமும் இருந்தார். குறிப்பிட்ட ஒரு நாளிலிருந்து வலது கையால் உண்ணத் தொடங்கினார். இறைவன் அருளால் செல்வமகன் வளர்ந்து 'ஏன் அம்மா மாறு கையால் உண்கிறீர்கள்?' என்று கேட்கும்போது இப்பழக்கத்தை நிறுத்தி விடுவேன் என்பதே அந்த விரதம்.

மகன் மீது அன்பு செலுத்துவதில் கணவனுக்கும் மனை-

விக்கும் எந்த வேறுபாடுமில்லை. ஆளாக்கி வளர்ப்பதில் தான் தலைகீழான வேறுபாடு. கிருஷ்ணகான வெள்ளத்திலும் ஆன்மீகச் சூழ்நிலையிலும் தான் வளர்க்கப்படவேண்டும் என்பது தந்தை. வெளிநாடு சென்று பாரிஸ்டராகத் திரும்பி வர வேண்டும் என்று கனவு கண்டாள் தாய். சிறுபையனாக இருந்த காலத்தில் பள்ளிக்குச் செல்லாமல் பிடிவாதம் செய்தால், தந்தை வற்புறுத்தி ஏதும் சொல்வதில்லை. பையன் மிருதங்கம் வைத்துக் கொண்டு கிருஷ்ணகானம் பயின்றால் போதும் என்பது தந்தை. ஒரு ஆளை அழைத்துக் கட்டாயமாகப் பள்ளியில் சேர்த்து வரச் செய்வது அன்னை. பெற்றோரின் இந்தப்போட்டியில்முழுநிறைவான வெற்றி அன்னைக்குக் கிடைக்கவில்லை. தந்தையின் பயிற்சியும், செல்வாக்குமே ஆபே சரனிடம் நிலைத்து விட்டது என்பதே உண்மை.

பிற்காலத்தில் ராதா கோவிந்த ஆலயத்திற்குச் செல்வதிலும், தன்னை மறந்து இசை பாடி வழிபாடு நடத்துவதிலும், கீதையினைப் பாராயணம் பண்ணுவதிலும், பாகவதம் பயின்று கண்ணன் புகழைப் பேசுவதிலும் ஆபேசரன் ஆழ்ந்து ஈடுபடுகின்ற அளவிற்குத் தந்தை அவரைப் பயிற்றுவித்து விட்டார் என்று கூடச் சொல்லலாம்.

கல்கத்தாவில் இருக்கும் ராதாகோவிந்த மந்திர் ஆண்டு தோறும் தேர்த்திருவிழாவினை நடத்துவது உண்டு. கிருஷ்ண பகவானுக்கு உலகைப் புரக்கின்றவன் என்ற பொருளில் ஜகந்நாதன் என்றும் பெயர். ஜகந்நாதன், பலராமன், சுபத்ரா ஆகிய மூவரும் அழகான தேர்களில்அலங்கார பவனி வருவர். இவ்விழாவினையொட்டி பல்லாயிரக் கணக்கான மக்கள் கல்கத்தாவில் கூடுவர். இதனை விட மிகவும் சிறப்பாக பூரி நகரில் ஜகந்நாதனுக்கு விழா எடுப்பது உண்டு என்று ஆபேசரன் கேள்விப்பட்டிருக்கிறார். தனது ஆன்மார்த்த குருவாகிய சைதன்ய மகானே நானூறு ஆண்டுகளுக்கு முன்னால் பூரி ஜகந்நாதரின் பிரம்மாண்டமான தேரினை பல்லா

யிரக்கணக்கான மக்களோடு தானும் சேர்ந்து இழுத்திருக்கிறார் என்ற வரலாற்று உண்மை ஆபே சரனை புல்லரிக்கச் செய்தது. இத்தகைய உணர்வுகளால் உந்தப்பட்ட இந்த இளைஞர் தந்தையின் உதவிபெற்று மூன்றடி உயரத்தில் சிறிய தேர் ஒன்றைச் செய்து தன்னையொத்த சிறுவர்கள் தாளத்தோடு இசை பாட ஒரு ராதாகிருஷ்ண விழாவினையே நடத்தினார். தெருவில் இருந்த உறவினர்கள் பிரசாதம் செய்து கொடுத்தனர். அமெரிக்காவில் சென்று ஆயிரத்துதொள்ளாயிரத்து அறுபதுகளில் பலரும் வியக்கும் வண்ணம் கண்ணனுக்கு ரத ஊர்வலம் நடத்துவதற்கு இந்த இளமைக் காலப் பயிற்சி பெருந்துணை புரிந்தது என்பதில் ஐயமில்லை.

சிறு கிருஷ்ண விக்கிரகங்களை இல்லத்தில் வைத்து நெய்விளக்கு ஏற்றி வழிபாடு செய்வதிலும் ஆபே சரன் தந்தையைப் பின்பற்றினார். ''கண்ணன் பெருமையினைப் பேசும் சிறு நூல்கள் எழுதுகிஃற பணியினைத்தான்எனது குருவிடம் கற்றுக் கொண்டேனேயொழிய, இறைபணித் தொடர்பான பிற அனைத்தும் தந்தையின் பயிற்சியே'' என்று அவரே கூறுவது உண்டு. 'மகன் அறிவு தந்தை அறிவு' என்பதும் ஒரு வகையில் உண்மைதான்.

ஆபே சரன் மிக்க இளைஞனாக இருந்தபோதே ஆன்மீகப் பணியில் ஈடுபாடு காட்டினாலும், கல்லூரிப் படிப்பையும் விட்டு விடவில்லை என்பது ஆச்சரியமான உண்மை. அந்தக் கால நிலையினை ஒட்டி தந்தையார் தனது மகனுக்கு உரிய காலத்தில் திருமணம் செய்து விட எண்ணினார். தங்களை ஒத்த செல்வந்தரான ஒரு வணிகக் குடும்பத்தில் ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்தார்கள். தனதுகல்லூரிப் படிப்பை முடித்த பிறகு திருமணம் செய்து கொள்கிறேன் என்று கூடச் சொல்லி திருமணத்தை ஒத்திப் போட்டிருக்கலாம். ஆன்மீகமோ, உலகியல் வாழ்வோ எதுவாயினும் தந்தை சொல் மாறாத தனயன் மறுமொழியேதும் பேசவில்லை. கிருஷ்ணபக்தியில்மூழ்கிக்கிடந்த கல்லூரி மாணவன் ஆபே சரனுக்கு வாய்த்த மனைவியின் பெயரும் ராதாராணி. பெயர்ப் பொருத்தம் மட்டும் மிகச் சிறப்பாக அமைந்தது எனலாம்.

—தொடரும்

## அறிவிப்பு

செந்தமிழ்-மதிப்புரைக்கு வந்துள்ள நூல்களில், கீழ்க்குறிப்பிடப் பட்டவை அடுத்து வரும் இதழ்களில் திறனாய்வு செய்யப் பெறும். தாமதத்திற்குப் பொறுத்தருள வேண்டுகிறோம்.

(1) வறுமையே வெளியேறு — சிறுகதைத் தொகுப்பு
(2) நேசமணி ஒரு பொய் — செய்தித் தொகுப்பு நூல்
(3) திருவள்ளுவர் திருப்பதிகம் — பாடல்கள்
(4) நெஞ்சில் விழுந்த அடிகள் — புதினம்
(5) ஸ்ரீரமணவழி — ஆன்மீகக்கட்டுரைகள்
(6) எதிர் நீச்சல் — கவிதை
(7) நாங்கள் அணிந்த மணி — பாராட்டு நூல்
(8) ஊருங்காலம் — புதுக்கவிதை
(9) பாவேந்தர் பிள்ளைத்தமிழ் — மரபுக்கவிதை
(10) கூட்டுக் குயில் — ,,
(11) ஒரு துறைக் கோவை — ,,
(12) The Path of Sri Ramana — வாழ்க்கை வரலாறு
(13) அமர நீதி — நீதி நூல்

---

## டாக்டர் ச. சாம்பசிவனாருக்குத் 'தமிழாகரர்' பட்டம்

தம் மதுரைத் தமிழ்ச் சங்க வளர்ச்சியிலும், செந்தமிழ்க் கல்லூரி வளர்ச்சியிலும் பெரும் பங்கு கொண்ட தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் திரு.ச. சாம்பசிவனாருக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் 'செந்தமிழ்ச் செல்வர்' எனும் பட்டமளித்துப் பாராட்டியமை அனைவரும் அறிவர். அன்னாருக்குத் திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள், தம் குருபூசை விழாவின் போது 'தமிழாகரர்' எனும் பட்டமளித்துப் பொன்னாடை போர்த்திப் பாராட்டியுள்ளனர் என்பதறிந்து பெரிதும் மகிழ்கின்றோம். அன்னாருக்கு எம் பாராட்டுக்கள்!

## தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் - 613001

### தமிழ்நாடு, இந்தியா

### இதழ் வெளியீடுகள்

செய்தி மலர்—திங்களிதழ், தமிழ்க்கலை—முத்திங்களிதழ்
News Bulletin — திங்களிதழ் Tamil Civilization—முத்திங்களிதழ்

### கட்டண விவரம்

| திங்கள் இதழ் | முத்திங்கள் இதழ் |
|---|---|
| ஓராண்டு உரு. 5 4 தாலர் | ஓராண்டு உரு. 50 10 தாலர் |

மூன்றாண்டு உரு. 12 10 தாலர்: ஐந்தாண்டு உரு 200; 40 தலார்

| | பக்கம் | உரு. |
|---|---|---|
| 1. தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் 50 — புலவர் செ. இராசு | 356 | 150 |
| 2. கலித்தொகை (நச்சினார்க்கினியர் உரையுடன்) — இ. வை அனந்தராமையர் அடிக்குறிப்புடன் | 1228 | 150 |
| 3. சங்க இலக்கியக் கட்டுரைகள் — கருத்தரங்கம் | 234 | 30 |
| 4. ஆராய்ச்சித் தொகுதி — மு. இராகவையங்கார் | 551 | 100 |
| 5. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை | 324 | 60 |
| 6. தொல்காப்பியம் - நன்னூல் - சொல்லதிகாரம் — பேரா. க. வெள்ளைவாரணர் | 474 | 75 |
| 7. நன்னூற் காண்டிகையுரை —ஆறுமுக நாவலர் பதிப்பு | 398 | 65 |
| 8. பெரிய திருமொழி உரையும் தமிழாக்கமும் — டாக்டர் தெ. ஞானசுந்தரம் | 688 | |
| நூலகப்பதிப்பு | | 180 |
| பொதுப்பதிப்பு | | 130 |

— (தொடர்ச்சி கடைசி வெளி அட்டையில்)

| | பக்கம் | உரு |
|---|---|---|
| 9. நீலகேசி (உரையுடன்) — பேரா. சக்கரவர்த்தி நயினார் பதிப்பு | 848 | 104 |
| 10. சட்டவியல் — பேரா. சக்கரவர்த்தி நயினார், பதிப்பு | 848 | 140 |
| நூலகப்பதிப்பு | | 92 |
| மாணவர் பதிப்பு | | 36 |
| 11. தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும் —பேரா. கே. எம் வேங்கடராமையா | 564 | 155 |

விற்பனைக்கழிவு: அஞ்சல் வழி 25 % நேரில் 30%
அஞ்சல் செலவு தனி
பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%
விற்பனையாளர்களுக்கு : பெறும் படிகளுக்கு ஏற்ப/ கழிவு உண்டு

தொடர்பு கொள்க : பதிப்புத்துறை இயக்குநர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் - 613 001

மணியம் பிரஸ், மதுரை-9